உ
ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவ நீதி வளர்த்திடும் தமிழ் பத்திரிகை


தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது


வெள்ளிக்கிழமை [22.8.80]

ரௌத்திரி வருஷம் ஆவணி மீ 6ம் நாள்

இதழ்: 3 சுடர் :17

RECEIVED
1980-12-16
PERIODICALS DIVISION
UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
LIBRARY





வேத நெறி உணர்த்தும் மலர்

## பிராமணர்கள் தமது பிழைகளையும் பேதமையையும் உணராதிருந்தால் சைவம் வளராது.

**பாவம் செய்ய வேத நெறியை மாற்ற கூசாது துணிந்தான் பிராமணன்! பிரசாரகப் பாதகர் அவரை ஆதரித்தனர்! பணக்காரர் பணத்தை பிழையான நெறிக்கே செலவு செய்தனர்! சைவம் அழிந்தது! பொய்மை பெருகியது!**

# இந்த நிலைகளை மக்கள் எப்போது உணர்வார்

நமது முன்னுரையின் கீழாக நாம் தரும் தேவாரத்தை நன்கு வாசியுங்கள்; மக்களே சிந்தித்து தெளியுங்கள். உங்கட்கு ஒரு பொல்லாப்பும் இல்லை. எம் சமயம் யாது? அது எப்படி இருக்கும் சைவம் என்றால் என்ன இதை கீழாக உள்ள எம்பிரான் சுந்தரர் தேவாரம் மிகு சிறப்பாகக் காட்டுகிறது. எனது உயிர் போகவரினும் உண்மையை உங்கள் முன் துணிவுடன் சொல்லி வைக்கின்றேன்.

இன்று நாம் காணும் எந்தக் கோவிலும் வேத நெறிக்குரிய கோயில் அல்ல! இவை யாவும் மிலேச்ச நெறிக்குரிய கோவில்! இத்தகைய கோவில்கள் எம் நாட்டில் இருப்பதால் எமக்கு ஏதும் சிறப்பில்லை பெருமையில்லை சுதந்திரமுமில்லை.

இன்று எந்தக் கோயிலாக இருந்தாலும் பெரும் தலங்களென கருதப்படும் நல்லூர் மாவிட்டபுரம் திருக்கோணேசுவரம் திருக்கேதீச்சரம் எல்லாமே மிலேச்ச நெறிக்குரிய கோயிலாகி விட்டன! உண்மையில் அங்கு வேத நெறி இருக்கவே இல்லை.

இந்தப் பரிதாப நிலைக்கு யார் பொறுப்பு? பிராமணரும் பிரசாரகருமே பொறுப்பு. கோயிலில் வேத நெறியை வளர்க்கவேண்டியவன் பிராமணன். வேத நெறிப்படி ஒழுக வேண்டியவன் பிராமணன். அவன் கூசாது அழிதல்லாம் அந்தக்காலம் இந்தக்காலம் அது பார்க்க முடியாதென்றால் வேத நெறி எதற்கு? என்றதே கேள்வி. அடுத்து பிரசாரம் என்செய்கிறது. எல்லாம் சரி எப்படியும் நடவுங்கோ? ஓம் முருகா ஓம்! ஓங்காரம் ஓங்காரம்! மயிலாடுது குயில் கூவுது! முருகன் வாறான்! ஆடி வாறான் ஓடி வாறான்! வாடா முருகா ஆடடா ஆடடா இதை எல்லாம் சொல்லியே பாட்டுப் பாடிப் பிரசங்கம்.

அடுத்து தரனன தொந் தோம் மத்தளம் கோடை இடி போல் அடிக்க (இப்பொழுது மத்தளம் இல்லை டறை மேளம் தான் மத்தளம் எல்லாம் பறையின்றை ஸ்ரையில் நடக்குது) வயலின் இரண்டு இருத்து அதோடு பிரசங்கியரின் பகிடிக்கு பெரும் சிரிப்பு! அடுத்த வரையும் பார்த்து கண் சிமிட்டு! தம்பி தங்கச்சி எல்லாம் சிரிப்பு! சிலவேளை ஒரே சிரிப்பு! பிரசங்கியார் ஒரே கிலுக்கு கிலுக்கு காசின் உலுப்பு பின்னர் அப்படியான நேரத்தில் சிவபெருமான் எழுந்தோடி வந்தார். கேட்டீர்களா பார்த்தீர்களா! சரி நமப்பார்பதிபதயே சொல்லுங்கோ! அரகரமகாதேவா! இது கேட்டு நித்திரையாய் கிடந்தது சொல்லாட்டில் அநேகர் அரகரமகாதேவா சொல்லாட்டில் பிரசங்கியாருக்கு ஆத்திரம் வந்திடும்.

உடனே தொடங்கி விடுவார்: இதென்ன அநியாயம் நாம் நமப் பார்பதி சொன்னால் உங்கள் வாயாலை அரகரமகாதேவா இது சொல்லப்பஞ்சியா! இந்த அர என்றதின் பதம் சொன்னார்க்கு முத்தி வரும் சித்தி வரும் காசு வரும் கலியாணம் வரும் கார் வரும் சோறு வரும் என்றெல்லாம் வியாக்கியானம் செய்வார்கள். இதைச் சொல்லி திரும்ப ஒருக்கால் நமப் பார்பதிபதயே சொல்லிப் பார்ப்பார் அதற்கு முந்தின வேண்டு கோளுக்காக 10 பேர் அரகரமகாதேவா சொன்னால்! உமும் உது பத்தாது இன்னும் கொஞ்சம் கூடச் சொல்லுங்கோ! அம்மாமாரைப் பார்த்து பிரசங்கியார் கண்குளிர்ந்து மலர்ந்து தாய்மாரே நீங்களும் வெட்கப்படாமல் சொல்லுங்கோ! ஒரு புன் சிரிப்பு ஆண்களைப் பார்த்து ஐயா மாரே வெட்கப் படாமல் வெட்கப் படாமல் சொல்லுங்கோ! சிவன் நாமம் சொல்ல வெட்கப் படுவதா! இதென்ன! இந்த ஊரில் சமயப் போதனை இல்லையா! அப்படி எல்லாம் பின்னர் இன்னுமொருக்கால் நமப் பார்பதிபதயே சொன்னால் இன்னும் கூடக்கத்தி அரகரமகா தேவா நடக்கும். நடந்த பின்பு பிரசங்கியாருக்கும் திருப்தி மக்களுக்கும் சிரிப்பு! சில வேளை கைத்தடிச் சக்காயடியும் நடக்கும்.

இது தான் நல்லை ஆதீனத்தின் சமய வளர்ச்சி பின்னர் பிரசங்கம் முடிய வில்லுப்பாட்டு பொப்பிசை இது தான் கோயில் நிலை தற்கால மக்களின் காசு நெறி.

ஆனமையாலே இந்தவழி நாம் நடக்க பிரசாரம் பிழை உணராது நமப்பார்பதிபதே ஓம் முருகா இவற்றை மட்டும் சொல்லித் தமது காசு தேடிட கோயில் வியாபார மேடையாக நமது தவ நெறி அழிந்தது. வைதிகம் அகன்றது தீய வழியே சிறந்தது கோயில் என்றால் எல்லாப் பழி பாதகத்திற்கும் ஏற்ற இடமாக வந்தது. பெரும்பாலாக இன்றைய பிரசாரகர் எவர்க்கும் வேத ஆகமம் தவநெறி வைதிகம் யாதுமே விளங்காது! கிருபானந்த வாரியாரே தவ நெறி வைதிகம் இலாதவர். அவர் இலங்கைக்கு முதன் முதலில் வரும் போது கள்ளக்கடத்தல் பொருள் சில கொண்டு வர அவரைச் சிலர் பாவித்தனர் என்பது வதந்தி இன்றும் காசு பெற்று கள்ள வழி மூலம் கொண்டு போறவர் என்பது மறைக்க முடியாத உண்மை! ஆனதினால் அவர் பற்றிய வதந்தி உண்மையாகும் என நினைக்க இடமுண்டு.

பிழை வழியை மறைக்கும் சமுதாயம் அவரைப் பெரிதாகக் கொண்டு ஏமாற்றலாம். ஆனால் என்றோ ஒரு நாள் இந்தப் பிழை வழிகள் நீங்க வேண்டும், பிரசாரத்திற்கு பணம் ஒரு பழி அது தவறு அது தவற்றைப் பெருக்கும்,

கிருபானந்த வாரியார் மட்டுமல்லாது இலங்கையில் தங்கம்மா மணிஐயர் விசுசித்தம்பி இவர்களும் பெரும் பிழையான வழியிலேயே செல்கிறார். இவர்களுடைய பிரசாரம் எந்தக் கோயிலுக்கும் அபசாரமாக வரப் போகின்றது உண்மை! இருந்து பாருங்கள் இப்பாதகரை ஆதரிக்கும் மக்கள் யாருமே நன்நெறிக்கு வரார்கள். இவர்கள் ஒருபோதும் திருவருள் எல்லை ... ல்வையார்கள்.

இவர்கள் பிரசாரம் செய்த கோயில் எல்லாம் பகை குரோதம் பிராமணரின் தீய நடத்தை காமம் கற்பழிப்பு இவையாவும் பெருகுகின்றன! இவர்பிரசாரம் செய்த கோயில் எதில் ஒன்றுதல் வேத நெறி அன்பு பத்திமை தருமம் தவவளர்ச்சி இருக்கின்றதா? காட்டட்டும் ஒரு கோயிலைக் காட்டட்டும்.

பிழையை மறை முசமாக பிரசாரம் ஆதரித்து வருதலால் வேத நெறி அழிந்தது சைவ தருமங்கள் அகன்றன.

கீழே தரப்படும் தேவாரம் என்ன சொல்கிறது என்று பாருங்கள்! முதல் பதிகத்து எடுத்த எடுப்பில் வேத நெறியில் நம்பிக்கை கொண்டார் அருள் பெறும் இடம் என்றார். வேத நெறியில் நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை இல்லாதவரால் வேத நெறிப்படி ஒழுகிட முடியாது.

பிரசாரம் வேத நெறியை வேத ஒழுக்கங்களை நல்ல முறை நடத்தைகளை எடுத்துக் கூறுவதோடு நின்று விடாது அந்தணர்கள் செய்யும் தவறுகளையும் எடுத்துக் காண்பிப்பதும் கோயிலில் மக்கள் செய்யும் தவறுகளையும் எடுத்துக் காண்பிப்பதும் ஓர் பெரும் தொண்டாகும்.

எல்லாத் தொண்டுகளிலும் தவறு செய்வாருடைய தவறுகளை சுட்டிக்காண்பிப்பது பெரும் சிவ தொண்டு என்பதை நம் மக்கள் நன்கு உணர வேண்டும்.

இந்த நிலையில் நாம் ஒன்று நன்கு சிந்திக்க வேண்டும். தவறுகளைக் காண்பிப்பதற்கு தவறுகளைக் காண்பிக்குமவர் வேத நெறி விளங்கியவராக இருத்தல் வேண்டும். அடுத்து வேத நெறியின்படி ஒழுக வல்லவராக வேண்டும். இந்த நிலையில் எமது நாட்டில் எத்தனை பேர் உளர்? அது ஒரு கேள்வி.

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கம் சினிமாக் காட்சிமூலம் ரூபா 7500 வரை சம்பாதித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பணம் படைத்தவர் முதலியார் மகேசன் சைவப்பெரியார் எனப்போற்றப்படும் மு, வைரமுத்து மானிப்காய் இந்துக்கல்லூரி அதிபராக இருந்து இளைப்பாறிய முத்துவேற்பிள்ளை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் குமாரசாமி இவர்களைப் போன்ற பலர் அதில் அங்கம் வகிக்கின்றனர்'.

இவர்கள் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலில் ஓர் பிரசாரக் கூட்டம் நடத்தினார்கள் நடத்திடும் போது வைரமுத்து அவர்களும் வேறு பேரும் அந்தணர்களைப்பற்றி கண்டனம் தெரிவித்தார்கள் என்ன கண்டன மென்றால் ஏதோ ஐயமார் அப்படிச் செய்யுறார் இப்படிச் செய்யுறார் என்று சொன்னதை தவிர ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்று கருத்துத் தெரிவிக்க முடியாமல் போய்விட்டது இந்த நிலையில் மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க அங்கத்தவர்கள் வீட்டிலிருந்து மீன் இறைச்சி போன்றன மறையவில்லை; வேதநெறி வீட்டிலே காணமுடியாது வீட்டிற்குப் போனால் எவர்க்கும் இது சைவனுடைய இல்லம் என்று சொல்ல முடியாது, எல்லாம் மிலேச்ச நெறி. அன்பு அருள் இரக்கம் ஈகை என்பது கிடையாது.

இதிலொருவர் தனது மனைவியின் தாயாருக்கு காலால் தூக்கி அடித்தவர். இவர்கள் இந்து சமய விருத்திச் சங்கத்தை ஒரு பொழுது போக்குச் சங்கமாகவே கருதினார்களேயன்றி வேறில்லை.

சினிமாக் காட்சி மூலம் பணம் பெறும் இவர்கள் வேத நெறி விளங்காத மிலேச்சர். இவர்கள் வேத நெறியின் துறையான சைவம் பற்றிப் பேச என்ன தகுதியுண்டு.

மானிப்பாயில் இரு பெரும் கோயில்கள் உள்ளது மருதடி விநாயகர் வேலக்கைப் பிள்ளையார் கோயில் இரு கோயில்களிலும் பூசை செய்யும் அந்தணர்களின் நிலை கவலையாக இருக்கிறது இதை இவர்களினால் திருத்திட முடியுமா?

தேவார வகுப்பு வைக்கலாம் பிரசாரக் கூட்டம் வைக்கலாம்; அறிக்கை சமர்ப்பிக்கலாம் அதெல்லாம் செய்யலாம் ஆனால் பிராமணர் சமுதாயம் நன்நெறிப் படைத்தல் மிக மிகக்கடினம் நாம் இங்கு குறிப்பிடுவது முழுவதும் உண்மை. ஆனால் இவர்கள் அதை மறுக்கலாம் மறைக்கலாம்; இதுவன்றி இவை போன்றுதான் யாழ்ப்பாணக் குடா நாட்டில் பல சமய சங்கங்கள் உண்டு, எவர்குமே வேத நெறி தெரியமாட்டாது தெரிந்து ஒழுக வல்லாரும் இல்லை, இது சத்தியம்.

இதனாலே வேத நெறி விளங்கி அதன்படி ஒழுகமாட்டாத எவராலும் வேத நெறியை வளர்த்திட இயலாது,

திருஞான சம்பந்தர் சமணர் புத்தருடைய ஆதிக்கத்தால் நாட்டில் வேத நெறி குன்றி சைவ ஒழுக்கங்கள் கெட்டிருந்த போது அவதரித்து மீண்டும் வேதநெறியையும் சைவ ஒழுக்கங்களையும் வளர்த்து விட்டுச் சென்றவர்.

இவரைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதாரம் செய்து சைவ ஒழுக்கங்களை நிலைபெறச் செய்து போயவர். இவர்களுக்குப் பின்னால் நெறிகள் பழுதாகிப் பழுதாகி மிகு மோசமாகி இன்று சைவ நெறிப்படி ஒழுக வல்ல கரவிலாத நன்நெறிப் பட்டோரைக் காணல் அரிதாகிஉள்ளது.

ஆதலினாலே மக்கள் பிழையான வழிநடந்து கொண்டு பிராமணர்களில் பிழைகாணல் பெரும் பழியாகும்.

ஒருவரில்பிழை காண்பதற்கு முன்னர் நாம் சைவநெறிப்படி ஒழுகவேண்டும். பொய்பேசக் கூடாது அரசியல் நோக்கமோ பட்டமோ பதவியோ எதற்கும் ஆசைப்படக் கூடாது, சினிமா வானொலி முதலிய பழுதான செயல்களில் சிக்கக்கூடாது தான் வசிக்கும் இருப்பிடம் இத்தனையையும் பிரதி பலிக்கும் இடமாக இருத்தல் வேண்டும். சுருங்கச் சொன்னால் நெஞ்சில் கரவிலாத தூயவராக இருத்தல் வேண்டும் இவ்வளவு தான் சைவத்துறைகள்.

வேதங்கள் சிவனைப் பரம்பொருள் எனக்கூறின அவனே எல்லாம் ஆக்குவான் என்றன ஏனைய தெய்வம் யாவும் தெய்வமாக இருப்பினும அவனலாது முழுமுதல் யாருமில்லை என்றன. இந்த ஒரு நம்பிக்கையில் மூழ்குவாரே வேத நெறியாளர் எனக்கூறுகிறார் 2 வது பாடலில். அதைத் தொடர்ந்து இத்தகைய வேத நெறியுடைய அந்தணர் கலியைக் காத்திடும் திருமிழலை என்கிறார் எம்பிரான் சுந்தரர்.

இந்த நிலையில் கலி என்றால் யாது? அது தான் ஆசை அதாவது இன்று நாம் காணும் மிலேச்ச நெறியாவும் கலி என்றே கருதப்படும் கலி என்பது அதுதான்.

பொய் கபடம் வஞ்சனைஇவை யாவும் கலி என்றே கருதப்படும் தூய நிராசை உடைய மனமே கலி நீங்கிய மனம். ஆசை வாஞ்சை யாவும் கலியின் சேட்டைகள். இவகளை அகற்றுதல் தூய வழிபாட்டால் அல்லாமன்றி வேறெதனாலும் முடியாது என்பது 2 வது பாடலின் கருத்து இதனாலே எத்தனை அந்தணர் இன்று கலி காத்தனர் ஒருவரைக் காட்டுங்கள்

சிவதொண்டன் நிலையம் போன்ற அறநிலையங்கள் தானும் இந்த கலிகாக்கும் செயலில் ஈடுபடவல்லனவா? எவ்வளவு பணம் நன்கொடையாகப் பெற்று சிவதொண்டன் நிலயம் வருமாறு வரி கூட பல ஆயிரக் கணக்கில் கொடுத்தது?

இந்த வகை நமது அறநிலையங்கள் யாவும் பொய்மையை மறைத்துக் கொண்டு ஏதோ சொல்ல முற்படுகிறார்கள். இவர்கள் சைவத்தைத் தமது பொழுது போக்காக அதாவது வாழ்வில் பல பொய்மையான வழிகளைக் கடைப்பிடித்து விட்டு ஒருநாள் மட்டும் கூடி ஏதோ சில பாடல் களைப்பாடி மகிழ்ந்து திருப்தியாகச் சாப்பிட்டு எழுந்து போவதே சைவம் என நினைக்கிறார். உண்மையில் சைவம் இதுவன்று இது விவேகானந்தர் சொல்வது போல் வாய் வேதாந்த மேயாகும்.

எமது நாயன்மார் காட்டிய சைவம் அவை முழுவதும் தொண்டாகவே இருக்கின்றன, திருக்கருப்பறியலூர் என்னும் சிவாலயத்தை எம்பிரான் சுந்தரர் தரிசித்துப் பாடும் பொழுது அந்த தேவாரத்தில் எவ்வளவு சிறப்பாக நமது சைவ நெறியை விளக்குகின்றார். உதாரணமாக சில பாடலில் ''முட்டாமே நாள் தோறும் நீர் மூழ்கிப் பூப் பறித்து மூன்று போதும கட்டார் நடை இன்னடை கொண்டு அடிச சோத்தும் அந்தணர்கள''

''பொய்யாத வாய்மையாற் பொடிப்பூசி போற்றி இசைத்துப் பூசை செய்து கையினால் எரி ஓம்பி மறை வளர்க்கும் அந்தணர்கள்''

இப்படியாக அங்குள்ள அந்தணர்களது பெருமை பற்றிப் பேசுகிறார், இந்தப் பதிகத்திலும் கலிகாக்கும் அந்தணர் என்கிறார்.

இத்த ஒரு நிலையில் பிராமணர் தமது வாய்மை நெறிகளை மறைத்து தமது தொழிலை வியாபாரமாக்கி தாம் சைவ குருமாரென்று கூறினால் இவர் செய்யும் பழிகளை எத்தனை காலமாக நாம் பார்த்திருக்கலாம். என்றோ ஒரு நாள் இதை வெளிப் படையாகச் சொல்லி பிராமணரே உங்களது உண்மைகளைப் பேணி நன்மையை வளர்த்து சைவ சமயத்தை நன்நெறிப் படுத்துங்கள் இன்று செய்வது போல் பல பொய் பல பிரளி பல ஏமாற்று இதையெல்லாம் செய்து சமயத்தை அழிக்காதீர்கள் என்றே சொல்லவேண்டியுள்ளது. இன்று கிட்டத்தட்ட 90 சத விகிதமான பிராமணரும் மத குருமாரென்ற நிலையில் வழுவி மதச் சண்டாளர் என்ற நிலையைப் பிராமணர் தாமாகத் தமது செயலால் வருவித்துக் கொண்டனர்.

இவர்களை சைவ சமயத்துரோகிகள் என்றோ அல்லது சண்டாளர் என்றோ சொல்வதில் ஏதும் தவறில்லை; அப்படிச் சொல்வார்க்கு ஏதும் துன்பம் நேராது திருவருளின் பாதுகாப்பு நிச்சயம் ஏற்படும் என்பதைச் சந்திரதீபம் வலியுறுத்திக் கூறுகிறது.

திருமூலர் பிழையான பிராமணனை நாட்டால் கலைத்துவிடு என்று அரசனுக்குப் புத்திமதி கூறுகிறார் தமது திருமந்திரத்தில். நாம் அப்படிக் கூற வரவில்லை, நாம் அவரைத் திருந்தி நடக்கும் படியே கேட்கிறோம். கோயில் பேரால் பொய் திருகு தாளம் இவற்றைத் தொடர்ந்தும புரியாது வேத அறங்களை உணர்ந்து நீதியாக நடந்து ஆலயங்கள் எங்கும் வேத ஓசையே சிறக்க வேத ஒழுக்கமான பூவும் நீரும் புண்ணியமே பெருக வழி காண்பீராக.

இங்கே தரப்படும் பதிகத்தில் முடிவில் சுந்தரர் பெருமான் என் சொல்கிறார் பாருங்கள் ''வேத வேதியர் வேத நீதியர் ஓதுவார் ''எனச் சொல்கின்றார்.

உண்மையில் இதை ஒவ்வொரு பிராமணரும் உணரட்டும். வேதவேதியர் என்றால் யார்? ஓதுவார் என்றால் யார்? இதையெல்லாம் நன்கு தெளியுங்கள்.

பழிகாரப் பிரசாரகரே உமக்கு இவைகளில் ஏதும் தெரியுமோ? சொல்லுங்கள். வேதநெறி வேதநீதி என்பது விளங்காது ஏதோ சித்தாந்தம் என்று பிதற்றும் மணிகட்டிய பண்டிதர் கணபதிப்பிள்ளையே நீஎத்தனையோ பட்டங்களைப் பெற்றாய்! உன்னால் முடியுமெனில் நாம் தருகின்ற தேவாரத்தை வைத்துக் கொண்டு உனது சித்தாந்தம் என்ன பயன் நாட்டிற்கு செய்தது அதை தெரிவிக்க முடியுமா? உங்களைப் போன்ற பாவிகளால் உண்மையாக எமது சமயம அழியவேண்டி வந்தது என்பது இனியும மறைக்க முடியாத உண்மை

பண்டிதமணியே சவர்க்காரமுதலாளிமாரின் கார்க் குஷன் சீற்றில் ஏறி இருந்து சமய விழாக்களில சென்று ஏதோ பேசி அலம்புவது புலம்புவது போல் சைவத்தை நினையாதே.

பிராமணரே பிரசாரகரே கேளுங்கள்! எமது சைவம் தூய கிரியைகளுடன் கலந்தது. வெறும் வாய்ப் பேச்சில் எம் சைவ வளர்ச்சியில்லை என்பதை கீழே நாம் தரும்; தேவாரம் தெளிவு படுத்து கிறது

புத்தம் முதலிய சமயங்கள் வெறும தத்துவப் பேச்சிலும் பிரசாரப் பேச்சிலும் இயங்குகின்றன நாங்கள் அப்படியில்லை என்பதை இத்தேவாரமூலம் உணருங்கள்.

# வேத நீதி சைவ நீதி பத்திமை பரம்பொருள் உணர்ச்சி காட்டும் திருப் பதிகம்

திருவீழிமிழலை
பண் சிகாமரம்
திருச் சிற்றம்பலம்

**நம்பி னார்க்கருள் செய்யு மந்தணர் நான்ம றைக்கிட மாய வேள்வியுள்**
**செம்பொ னேர்மட வாரணி பெற்ற திருமிழலை**
**உம்ப ரார்தொழு தேத்த மாமலை யாளொடும் உடனே உறைவிடம்**
**அம்பொன் வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே**

வேத நெறியில் நம்பிக்கை உடையவர்க்கு அருள் செய்யும் இடமாகி; வேத நெறி நின்று ஒழுகிடும் அந்தணர்களது நான்கு வேதங்களிலும் சிறந்து சொல்லப்பெறும் யாகங்களினுள்ளாக சீரிய அருள் பாட்டினால்; செம் பொன்னை நேராக ஒத்த அழகுடைய பெண்கள் திருவுடைய அழகு பெற்ற திருவீழி மிழலை என்னும் திருத்தலத்தில் தேவர்கள் நாள் தோறும் சென்று வழி பட்டுப் போற்றி செய்திட பெரும் இமயமலையில் சென்று அவதரித்த உமையம்மையாருடன் கூடி அழகிய பொன்னான திருவீழிமிழலைக்கோயிலை உமக்கு இருப்பிடமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டீர் எம்பிரானேசிவனே உமது
அடியேனுக்கு அருள் செய்வீராக.
வேத நெறியில் நம்பிக்கை கொ
ண்டு ஒழுக வல்லார்க்கு நிச்சயம்
அருள் பெறும் இடம் திருவீழிமிழ
லைக் கோயில் என்றதால் நம்பினர்க்
கருள் செய்யும் எனக் கூறியருளினர்.

நான் மறைக்கிடமாய வேள்வி
என்றது நான்கு வேதங்களும் வே
ள்விகளையே சிறப்பித்துச் சொல்வன
சைவத்தில் வெறும் வாய்ப் பேச்சு
மட்டும் இல்லை! செயல் பாடே. வே
தங்கள் கூறுவன வேள்விகள் மூலம்
உயர்ந்த நிலையைப் பெறலாகும்
என்பது தொன்று தொட்டு நிலவி
வரும் உண்மைகளாகும்!

எந்த ஒரு சைவ ஒழுக்கத்திலும்
யாகமில்லாது இல்லை! வழிபாட்டில்
சிறந்த அம்சம் யாகம்! ஆனதினுல
இந்தச் செயல் அன்று எல்லாக்
கோயிலிலும் இடம் பெற்றது! இன்று
அது தவறி வேறு வேறு நெறிகள்
புகுந்து கொண்டன!

வேள்விகளுக்குப் பதிலாக இன்
றுநடக்கும் செயல் ஒலி பெருக்கி
வில்லுப்பாட்டு பொப்பிசை பிரசங்
ம் ஆகியன மிது கேவலம் நிறைந்
த செயல்களாகும்! இந்தப் பழுது
களை எந்த ஒரு பிராமணண் உணர்
வான்! தன் கடமையைத் தான்
உணராத நாய்களோடு நாம் சொல்
லி என்ன ஆகப் போகின்றது!

நாயன்மார் யாவரும் வேத வே
ள்விகளைச் சிறப்புறப் பேசிச் சென்
றுள்ளனர், ஆனுல் இன்று யாகங்க
ளில் நம்பிக்கை இல்லை. அவை யா
வும் அகன்றன உண்மையாக பிலே
ச்சருடைய செயலான போதனையே
கோயில்களில் இடம் பெறுகின்றன
இந்தப் பழியான ஒரு மாற்றத்தி
ற்குக்காரணம் சைவ மடங்களே
சைவத்தில் மடங்களுக்கு இடமே
இல்லை. மடங்கள் சைவத்தை வேத
நெறியை முற்றிலும் மங்கச் செய்
யும் சண்டாளருடைய துரோகிகளு
டையஇருப்பிடமேயாகும். இலங்கை
யிலோ இந்தியாவிலோ உள்ள எந்
த ஒரு மடத்தால் சைவ நன்நெறி
களும் ஆகம சீலங்களும் நிலை பெற
இருக்கின்றன ஒன்றைக் காட்டுங்கள்!

புத்தர் சமணருடைய வழிதான்
மடங்கள்—போதனைகள், நாயன்மார்
யாவருமே மடாதிபதிகள் அல்லர்
எவர் ஒருவர் மடாதிபதியானர் காட்
டுங்கள் மடங்களைப் பற்றிய வர
லாறு ஏதும் ஒருபதிகத்து உண்டா
காட்டுங்கள் உண்மையான வேத
நெறி ஆகம சீலம் வளர வேண்டு
மேல்மடங்கள் அத்தனையும் ஒழிய
வேண்டும்.

யாகங்களால் பருவ மழையும்
யாகங்களால் திரவியமும் செல்வ
மும் யாகங்களால் பகை நீக்கமும்
யாகங்களால் அழகும் யாகங்களால்
வீரமும் யாகங்களால் முடிவில் முத்
தியும் பெறப்பட்டன. இங்கே உள்
ள பதிகத்து வேள்வியின் பயனுல்
பொன்னை ஒத்த அழகுடைய பெண்
கள் நலமுற வாழும் திருவீழிமிழலை
என்னும்போது நமது ஆதி சைவப்
பிராமணர்களது பெண்களின் சிறப்
பு எத்துணைச் சிறப்பாக இருந்திருக்
கும் எண்ணிப்பாருங்கள்.

கற்று ஆங்கு எரி ஓம்பிக் கலி
யை வாராமே செற்றார் வாழ்தில்லை
எனச் சம்பந்தர் சிறப்புறக் கூறிய
மை உணருங்கள்;

கலிபெருகின் பெண் மூர்க்கமுடை
யளாவாள். பணிந்த சொல் இராது
கணவனை மதியாள் கணவன் ஏவற்
படி நடவாள் ஆகவே யாகங்களா
ல் கலிநீங்கப் பெற்றவுடன் பெண்
களும் நலமுடைய நல்லொழுக்க மு
டைய உத்தமிகளாக வந்தனர் என்
றது உண்மை

அணிபெற்றது என்றது உள்ளத்
தில் தூய்மையும் பதி விசுவாசமும்
புறத்தில் அழகும் எனப் பேசப்படு
வது.

விடங்கொள் மாமிடற் றீர்வெள்ளைச் சுருள்ஒன் றிட்டுவிட்ட காதினீர்என்று
திடங்கொள் சிந்தையி ஞர்கலி காக்குந் திருமிழலை
மடங்கல் பூண்ட விமானம் மண்மிசை வந்திழிச்சிய வான நாட்டையும்
அடங்கல் வீழிகொண் டீர்அடியேற்கும் அருளுதிரே

நஞ்சு கொண்ட பெரும் கண்
டம் உடையீர்! வெள்ளைச் சுருள்
உடைய தோடு ஒன்று அணிந்து
கொண்டு தூங்கவிட்ட திருக்காது
உடையீர் என்று இன்னவாறு
உம்மையே தவருது போற்றிடும்
திடங்கொண்டிடுகின்ற சிந்தையுடை
ய அந்தணர்கள் கலிவராது காத்
திடும் திருவீழிமிழலை என்னும் பதி
யில் சிங்கங்கள் சுமந்த விமானம்
மண்மீது இறங்கி வான நாட்டையும்
உள்ளாக அடங்கப் பண்ணிய திரு
வீழிமிழலைக் கோயிலில் இடங்கொ
ண்டீர் எம்பிரானே அடியேனுச்கும்
அருள் புரிவீராக.

சிவனே பரம் பொருள் அவன
லாது தெய்வமில்லை அவன் நஞ்
சை உண்டு உலகைக் காத்தவன்
அதோடு வெண் தோடு அணிந்த
செவியுடையவன். இது அவனது உரு
வம்

வெள்ளைக்கில்லை கள்ளமும் கப
டமும் ஆதலினுலே கள்ளம் கபடம
ற்ற வாழ்க்கையில் சங்கடம் பெருகு
தல் இயல்பு ஆதலால் எந்தச் சங்
கடம் வரினும் நஞ்சுண்ட கண்டம்
எமைக் காக்கு மென்பதால் திடம்
கொண்ட சிந்தையினர் என்றார்.

தீவினையான செயல் நீங்கவே
தோடு வெண்மையானது: ஆதலின்
தீவினை நீங்கி வாழ்பவரால் தான்
கலியை நீக்கிட முடியும் என்றதால்
சிவனே பரம் பொருள் எனத்திடங்
கொண்ட சிந்தையினரென்ருர் இவை
களை இன்று யார் விளங்கிட வல்
லார்

பந்தம் வீடிவை பண்ணினீர்ங் படிறீர் மதிப்பிதிர்க் கண்ணி யீரென்று
சிந்தை செய் திருக்குஞ் செங்கை யாளர் திருமிழலை
வந்து நாடகம் வான நாடியர்ஆட மாலயன் ஏத்த நாடொறும்
அந்தண் வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே

ஊனைக் கொண்ட உடம்பில்
தங்கியிருந்து உணரும் உயிராக நீர்
நிற்கிறீர் சூரியன் சந்திரன் அக்கினி
ஆகிய ஒளிப் பொருள் மூன்றுமாகி
தெளிந்த நீருடன் பசுவினிடத்து
பெறும் ஐந்து பொருள்களான பால்
தயிர் நெய் சலம் சாணம் தேன்
இவற்றைக் கொண்டு நீராட்ட விரு
ம்பி உகந்தீர் செழுமைமிக்க மாட
ங்கள் நிரம்பிய திருவீழிமிழலைக் கோ
யில் மான்கன்றைப் பொருந்திய
கையுடையவராயினீர் மழுப்படை
யை ஏந்தியருளினீர் பெண்ணை ஓர்
பாகமாக உடையீர் வானில் நின்
றும் வந்து கீழ் இறங்கிய வீழிமிழலை
விமானத்தின் கீழாக இருந்தருளி
னீர் அடியேனுக்கும் அருள் புரிவீராக

உடம்பில் உயிராவது சிவம்
உயிர்தான் உடம்பைத் தோற்றுவித்
தன்றி உடம்பு உயிரைப் பெற்ற
தென்றது புத்தருடைய கொள்கை
புத்தருக்கு உயிரென்ற பேச்சுக்கே
இடமில்லை.

உடம்பில் நின்று உணர்வதெல்
லாம் உயிர் உடம்பு நித்திரையா
கக் கிடக்கும் போது உடலில் தீண்
டினுல் உயிர் உணர்ந்துதான் திடுக்
கிட்டு எழுவார்கள் இதன் உண்
மைகளை விளங்குவது மிகு கடினம்
குதர்க்கம் பேசி வீண் பொழுது
போக்குவோர் பல பாட்டிற்கும்
பேசலாம் ஆனுல் சைவன் கண்ட
உண்மை உயிர் சிவமானது என்பதே
யாகும்

பசுவிடத்து பெறும் பால் தயிர்
நெய் சலம் சாணம் இவையும் தே
னும் சிவ சம்பந்த முடையன என
எப்பவோ எமது மக்கள் தெளிந்து
உள்ளனர்.

திருவீழிமிழலையில் சுவாமி வா
னில் நின்றும் கீழ் இறக்கிய ஓர் வி
மானத்தின் கீழ் இருப்பவர்; இந்த
விமானத்தில் சிங்கம் சுமப்பது போ
ல் பாவனை

விஷ்ணு பெருமான் உலகைக் கா
த்திடசக்கரப்படை பெறும் பொ
ருட்டாக ஈசனை அர்சசனை புரிவத
ற்காக சிவலிங்க மூர்த்தியைஸ்தாபித்
திட வானில் நின்றும் இந்த விமா
னத்தைக் கொண்டுவந்தார் என்பது
வரலாறு. அதன்படி அவர் தினந்
தோறும் ஆயிரம் தாமரைப்பூவால்
அர்ச்சனை புரிந்துவந்தார். ஒரு நாள்
ஒரு பூக்குறைந்ததால் அதற்காகத்
தனது கண்ணைப் பிடுங்கி அர்ச்சனை
புரிந்தார் அவ்வாறு செய்தலும் சிவ
லிங்க மூர்த்தியில் தோன்றி சக்கரப்
படை கொடுத்தார் என்பது வரலா
று ஆகவே முதற்பதிகத்திலும் இப்
பதிகத்திலும் விமானத்தைப் பற்
றிய வரலாறு கூறப்பட்டது; விண்
ணில் ஆள என்றது வான உல
கில் செய்யப்பட்டது;

ஊதனை உற்றுயிர் ஆயினிர் ஒளிமுன்று மாய்தொளித் நீரோட ானஞ்சின்
னே ஆட்டுகந் தீர்செழு மாடத் திருமிழலை
மானை மேவிய கையினீர் மழுஏந்தினீர் மங்கை பாகத் தீர்விண்ணில்
ஆன வீழிகொண்ட டீர்அடி யேற்கும் அளுநதிரே

பந்தம் பந்தத்தினின்றும் விடுத
லையான முத்தி இவற்றை உண்டாக்
கினீர் இவை செய்து ஒருவருக்கும்
தெரியாதபடி ஒளித்துள்ள கள்ளனு
யினீர் இளம்பிறையின் ஒற்றைக் கீற்
றுக் கண்ணியுடன் திகழும் பெருமா
னே என்று தியானித்து இருக்கும்
சிவந்தகையுடைய பெருமக்களாகும்
அந்தணருடைய திருவீழிமிழலையில்
வந்து வான நாட்டிலிருக்கும் பெண்
கள் நாட்டியமாட திருமாலும் பிர
மனும் நாள்தோறும் போற்றிவழிபட
அழகான இத்திருவீழி மிழலைக் கோ
யிலில் இருப்பிடம் கொண்டீர் அடி
யேனுக்கும் அருள் புரிவீராக

பந்தமும் வீடும் பரம் பொருளே
படைத்தது ஆனுல் அதன் இயல்பு
அறியப்படாது. அது அப்படி உள்ள
காரியம் படைத்தோனையாரும் கா
ண முடியாது என்றதால் படிறீர்
என்ருர். அடுத்து அவன் இவ்வாறு
ன வண்ணமுடையன் கீற்றுப்பிறை
யன் வெண் தோடுடையவன் நஞ்
சுண்டவன் என்று அவனை அறிந்
தோர் சொல்லக் கேட்டு அவ்வண்
ணமே தியானித்திருக்கும் செயலு
டையவர் திருவீழிமிழலை அந்தணு
ளர் என்றதால் சிந்தை செய்திருக்
கும் அந்தணுளர் என்ருர்!

காண்டற்கரிய கடவுளைக் கண்டோ
ராகும் நாதாக்கள் சொன்ன நலமு
டைய இலட்சணங்களை எண்ணியிரு
த்தல் தான் வேதநெறி. வேதங்கள்
சிவனுடைய இலட்சணம் இப்படி
என்று சொல்லிவிட்டு காண்பதற்
குற்ற ஆசையால் ஐயா எங்குற்ருய்
என சிந்தையால் ஆழ்ந்து அகலத்
தேடுவன! அந்தணர்க்கு சிவத்தியா
னம் எத்துணைப் பெரும் சிறப்பு
என்பதை உணருங்கள்!

புரிசை மூன்றையும் பொன்றக் குன்றவில் ஏந்தி வேதப் புரவித் தேர்மிசை
திரிசெய் நான்மறை யோர்சிறந் தேத்தும் திருமிழலைப்
பரிசி ளுலடி போற்றும் பத்தர்கள் பாடி ஆடப் பரிந்துநல்கினீர்
அரிய வீழிகொண் டீர் அடியேற்கும் அருளுதிரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரங்கள் மூன்றையும் மேரு
மலை என்னும் வில்லை ஏந்தி வேதங்
கள் என்னும் குதிரை பூட்டிய தேர்
மேலாக நின்று மூன்று புரங்களையும்
எரித்து நீறுக்கிய நான்கு வேதமுண
ர்ந்த பிராமணர்கள் சிறந்து போற்
றும் திருவீழிமிழலை என்று தொழு
திடும் பரிசினுல் திருவடி போற்று

கின்ற பத்தர்கள் பாடி ஆடிட அவர்க்கெல்லாம் பரிவுடன் (காசு) கொடுத்தீர்! நினைத்தற்கும் அரிய திருவீழிமிழலை கொண்டீர் அடியேனுக்கு அருள் புரிவீராக!

ஆணவம் கன்மம் மாயை (பொன் பெண் மண் என்றமயக்கம்) இவை மூன்றுமே மும்மலம் என்றும் அவையே முப்புரம் என்றும் கூறுகிறார் திருமூலர். முப்புரமென்பது இவையாயின் இந்த மூன்றும் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உண்டு! இதை வெல்லாது யாருமே சிவானுபூதி பெறமுடியாது

இந் முப்புரங்களையும் சிவன் எரித்திடும் போது மேருமலையை வில்லாக ஏந்தி வேதங்களைக் குதிரையாகப் பூட்டிய வைதிகம் என்னும் தேரில் நின்று முப்புரம் எரித்தாரென்பது வரலாறு. அதேபோன்று இந்த திருவீழிமிழலை அந்தணரும் நல்லொழுக்கத்தால் வைதிக நெறியால் ஆகம சீலங்களை அநுட்டித்தலால் முப்புரம் போன்ற மும்மலங்களையும் எரித்திடுவார் என்பது தோன்ற திரிசெய் நான் மறையோர் எனப் பேசுகிறார் இதை யார் உணரப் போகிறார்

**எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன் ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்**
**செறிந்த பூம்பொழில் தேன்துளி வீசுந் திருமிழலை**
**நிறைந்த அந்தணர் நித்த நாடொறும் நேசத் தாலுமைப் பூசிக் கும்மிடம்**
**அறிந்து வீழிகொண்டீர்அடி யேற்கும் அருளுதிரே**

தந்தையை வாளால் வெட்டிய சண்டேஷ்வரநாயனார் தனது கண்ணைத் தோண்டிய கண்ணப்பர் முதலானோர் உலகறியத் தீங்கு செய்தாலும் அவ்வாறு அவர் உம்மைப் போற்றிடுகின்ற காரணத்திற்காக அவர்களுக்கு மேலான உயர்வைக் கொடுத்தருளினீர். நல்நிலை உடையதாகச் செறிந்திருக்கும் பூஞ்சோலைகள் தேன் துளிகளை வீசும் சிறப்புடைய திருவீழிமிழலை என்னும் தலத்தில் நிறைவுடைய குணம்மிக்க அந்தணர்கள் நித்தலும் நாள்தோறும் நேசத்தால் உமைப் பூசிக்கும் இடம் இதுவாகும் என அறிந்து அவர்வழிபாட்டிற்காக இத் திருவீழிமிழலையில் தங்கினீர். அடியேனுக்கும் அருள் செய்வீராக.

சண்டேஸ்வர நாயனார் சிவவழிபாட்டிற்கு இடையூறு செய்த தன் தந்தையின் காலை வெட்டியவர். கண்ணப்பர் சுவாமியின் கண்ணால் நீர் வடியக்கண்டு தன் கண்ணைப் பிடுங்கி சுவாமியின் கண்ணில் அப்பியவர். இதனால் இவர் செயல் உலகம் அறிய பழுதாக இருப்பினும் சிவனுக்காகச் செய்தமையால் ஏற்றம் பெறவேண்டி வந்தது.

திருமிழலை நிறைந்த அந்தணர் என்றது காமம் குரோதம் பகை நீங்கிய பெருமக்களாகும் அந்தணர் என்க.

நேசத்தால் பூசிக்கும் இடம்தான் இறைவன் இருப்பிடமாக மாறும் மற்றவை எல்லாம் கொலைக் களம் போல கெடுபிடி நிறைந்த இடமாகுமென்பதை அறிந்து வீழி கொண்டீர் என்கின்றார்.

**பணிந்த பார்த்தன் பகிரதன் பல பத்தர் சித்தர்க்குப் பண்டு நல்கினீர்**
**திணிந்த மாடந் தொறுஞ் செல்வம் மல்கு திருமிழலை**
**தணிந்த அந்தணர் சந்தி நாடொறும் அந்தி வானிடு பூச்சிறப்பிவை**
**அணிந்து வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே**

தவநெறியால் பணிந்த அருச்சுனன் பகிரதன் இவர் முதல் பல பத்தர்கள் சித்தர்களுக்கு முன்பு அருள் கொடுத்தீர், சிறந்த மேல் அடுக்கு மாளிகைகள் தோறும் செல்வம் பெருகிடும் திருவீழிமிழலை என்னும் தலத்தில் கோபம் அழுக்காறு காமம் முதலிய கெடுதிகள் அகன்று தணிந்த மனமுடைய அந்தணர்கள் காலை (சந்தி)யிலும் மாலை (அந்தி)யிலும் கடவுள் அடிபணியச் சூட்டிடுகின்ற பூக்களின் சிறப்பு இவற்றை ஏற்று அணிந்து திருவீழிமிழலையை இருப்பிடம் கொண்டீர் அடியேனுக்கும் அருள் புரிவீராக.

அழுக்காறு காமம் குரோதம் கோபம் இவை நெருப்பின் இயல்புடையன[ ஆதலினால் இவை நீங்குதல் மனதைத் தணிவு செய்தலாகும்! சந்தி என்றது இரவும் பகலும் சந்திக்கும் நேரம்; அது காலை மாலை எனப்படும். இருகாலங்களிலும் நீராடி நீறணிந்து பூக்கொய்து மாலை கட்டி நித்தலும் மாலைசூட்டி வழிபாடு செய்யும் அந்தணர் என்க.

பார்த்தன் (அருச்சுனன்) பாசுபதப்படை பெற்றவன். பகீரதன் கங்கை ஆறு பெற்றவன். பல சித்தர் பத்தர் தவத்தால் வேண்டியது பெற்றவர்.

**பரந்த பாரிடம் ஊரிடைப்பலி பற்றிப் பார்த்துணுஞ் சுற்ற மாயினீர்**
**தெரிந்த நான்மறை யோர்க்கிடம் ஆகிய திருமிழலை**
**இருந்து நீர்தமிழோ டிசைகேட்குமிச்சையாற் காசு நித்தல் நல்கினீர்**
**அருந்தண்வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே**

பரந்த பூதங்கள் ஊரிடத்தாக பலிகளை ஏற்று அவர் பகிர்ந்து கொடுத்து உண்ணும் சுற்றமாக உமக்கு அமையும்படி கொண்டுள்ளீர் நான்கு வேதங்களைத் தெரிந்து கொண்ட அந்தணர்க்கு இடமாகிய திருவீழிமிழலையில் நீர் இருந்து தமிழோடு இசைகேட்பதே இச்சையால் நித்தலும் திருநாவுக்கரசாக்கும் சம்பந்தருக்கும் காசு கொடுத்தருளினீர்; நல்ல குளிர்ச்சிதரும் அருமையாகிய இடமான திருவீழிமிழலையை இருப்பிடமாகக் கொண்டீர். அடியேனுக்கும் அருள் புரிவீராக.

பூதங்கள் பலி ஏற்று பார்த்துண்ண இருந்த பெருமான் என்றது கருணையின் சிறப்பு! பார்த்துண்ணல் என்றது பகிர்ந்து கொடுத்துண்டதாகும்.

சைவத்தில் உணவு உண்ணு முன் யாரும் வருவாரோ எனப் பார்த்திருந்து உண்ணல் ஓர் சிறப்பாகும் இதனை திருமூலர் (பார்த்திருந்து உண்மின்) என தமது திருமந்திரத்தில் கூறுகின்றார்.

தெரிந்த நான் மறையோர்க்கிடமென்றது தருமம் சத்தியம் வேத நெறிகளை விளங்கிய அந்தணர் என்றதாகும். தமிழுடன் இசை கேட்கும் இச்சைகாரணமாக தமிழிற்கும் இசை உலகிற்கும் சிறப்புத்தர வந்த திருநாவுக்கரசற்கு திருஞானசம்பந்தர்க்கு நித்தலும் காசு கொடுபட்டதாகும்.

**தூய நீரமு தாய வாறது சொல்லு கொன்றுமைக் கேட்கச் சொல்லினீர்**
**தீய ராக்குலை யாளர் செழுமாடத் திருமிழலை**
**மேயநீர்பலி ஏற்றதென் னென்றுவிண் ணப்பஞ் செய்பவர்க்கு மெய்ப்பொருள்**
**ஆய வீழிகொண் டீர்அடி யேற்கும் அருளுதிரே**

தூய நீரையே உமக்கு அமுதாயவாறு சொல்வீராக என உமைக்கேட்க அதற்கு காரணம் சொல்லினீர். தீயவராக வரும் நிலைகளைக் குலைத்து நீக்கி என்றுமே நல்லவர் இருக்கும் செழுமையான மாடம் நிரம்பிய திருவீழிமிழலை வீற்றிருந்த நீர் பலியேற்றதென் என்று உமக்கு விண்ணப்பம் செய்வார்க்கு உண்மைப் பொருள் அதுதான் என விளங்கும் படியான திருவீழிமிழலை என்னும் கோயில் கொண்டீர். அடியேனுக்கும் அருள் செய்வீராக.

தூயநீர் காலை மாலையில் அடியார் கொடுக்கும் அர்க்கிய நீர். இது எப்படி நீர் அமுது கொள்கிறீர் என அது உடல் பொருள் ஆவி மூன்றையும் அள்ளு நீருடன் கைக்கொள்வேன் எனக் காட்டியவாறு! நித்தலும் கையில் வார்த்துக் கொடுக்கும் நீர் அர்க்கியம் எனப்படும். இதனாலே இதை இறைவன் அமுதாக்கலால் கொடுத்தார்க்கு பயன் எய்தியது? கொடுத்ததை அமுதாக்கல் தூய்மை பற்றி என்றது

தீயராக் குலையாளர் என்றது எக்காரணமாகவும் தீமை பயக்கும் பொருள் வரினும் அதனால் தமது மனம் பழுதடையாது இருள் வழியில் போய் தீமை புரிந்து மாறுபாடான கருமம் புரிந்து அருள்வழி குலையாத தூய அந்தணர் என்றதாகும். அந்தணர்க்கு மண் பொன் பூமி என்றதும் பட்டம் பதவி என்றதும் எப்பொழுதுமே தமது அருள் வழியைக் குலையச் செய்து தீயவழிக்கு பல பெருங்குலத்து அந்தணர்களைப் பாழாக்கும் செயல்கண்ணால் காணப்படுவ தொன்றாகும்.

பலி ஏற்றது என் என்று விண்ணப்பம் செய்பவர்க்கு; மெய்ப்பொருள் ஆய; வீழி கொண்டீர் என்றது சிவன் பிச்சை ஏற்பது இகழ்ச்சியோ என்றால் இல்லை சிவன் தானே உலகேழையும் படைத்து சர்வ வல்லமை உடையராயும் தான் இரந்தான் எதற்காகவெனில் தான் இரப்போனாக வருதலால் பலியினை ஏற்றதால் எட்ட முடியாத உண்மைப் பொருளான தன்னை எட்டும்படி செய்வதே காரணமாகிறது.

சர்வவல்லமை உடைய பொருள் கீழ்மையான இரத்தலைச் செய்தல் உண்மைப் பொருளை பொய்ப் பொருள் பேணும் ஏனைய மக்கள் பெறும் பொருட்டேயாகும்—இரந்துண்டு தன்னை எட்டச்செய்தானே—என்கின்றார் திருமூலர்

உண்மை தெளிந்த மகான்கள் எப்பொழுதும் இரத்தலை மேற்கொண்டனர்! உண்மைவிளங்கிய இஸ்லாமிய மகான்கள் மகத்துக்கள் எத்தனையோ பேர் இரத்தலை பிச்சை ஏற்றலை மேற்கொண்டனர்;

இவையெல்லாம் ஈசன் திருவிளையாட்டு! இதனை மாணிக்கவாசகர்—ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்கள் உய்ந்து ஒழிந்தோம்.! என திருவெம்பாவையில் கூறுவது காண்க.

உண்மை தெளிந்த பின்னரே மாணிக்கவாசகர் பிரதமமந்திரிப் பதவிலய உதறித்தள்ளி விட்டுப் பிச்சைக்கே இச்சித்தார். இதன் தாற்பரியங்கள் யாருக்கு விளங்கும்.

சைவத்தில் மகத்துக்களாக விளங்கியோர் யாவரும் பிச்சைச்சோறே உண்டவர். இன்றுள்ள பிராமணர்க்கு இதன் தாற்பரியம் இரகசியம் விளங்குமோ?

கோயில் என்பது உண்மைப் பொருளின் உறைவிடம்! இன்றுள்ள கோவில் பலவும் ஒரு கோட்டல் அல்லது சுப்பமார்க்கெட்டாக விளங்குகின்றன. உண்மை விளங்கிய பிற்பாடு நான் ஒரு கோயிலுக்கும் போவதில்லை. ஏனென்றால் கோயில் வியாபாரக்கடையான பின் அதை மெய்ப்பொருள் உறைவிடமெனலாமோ? தயவு செய்து சைவமக்களே பதில் கூறுங்கள்? எந்தக் கோயிலுக்கு போய் மெய்ப்பொருள் பெறலாம் ஒரு கோயில் காட்டுங்கள்; தென்இந்தியாவிலோ இலங்கையிலோ கோயிலென்றது வியாபாரமிலாது மெய்ப் பொருளாக இருப்பது ஒன்று காட்டுங்கள்!

இஸ்லாமியருடையபள்ளிவாசலைப் பாருங்கள்! அவர்களுடைய பள்ளி உங்கள் கோவிலைப் போல் வியாபாரநிலையமாகவா வைத்திருக்கிறார்கள்! அவர் தமது பள்ளிகளை ஆண்டவனைத் தொழுதிடும் இடமாகக் கருதினார்கள். ஒருவாறு சுந்தரர் பெருமானுடைய தேவாரக்கருத்தை விளங்கிய அவர்கள் பள்ளிகளை மெய்ப் பொருளுக்குரிய இடமாகக் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வேதியர் வேத நீதியர் ஓது வார்விரி நீமிழலையுள்
# ஆதி வீழிகொண் டீர்அடி ேறற்கும் அருளுகென்று
# நாத கீதம்வண் டோவார் பொழில் நாவலூரன் றொண்டன் நற்றமிழ்
# பாதம் ஓதவல் லார்பர னோடு கூடுவரே

வேதங்களை உணர்ந்த அந்தணர்களாயும்; வேத நீதியின்படி ஒழுகு பவராயும்; வேதங்களை ஓதுபவராயும்; நிறைவுற்ற வாழ்வில் தவறாது ஒழுகுகின்ற விரிந்த நீர் நிலைகள் கொண்ட திருவீழிமிழலை என்னும்பதியில் ஆதியான வீழிமரநீழலில் இருப்பிடம் கொண்டீர். அடியேனுக்கும் அருள் புரிவீராக என்று நாத கீத்ததை வண்டுகள்பாடுகின்ற நெருக்கமாகப் பரந்த சோலைசூழ்ந்த திருநாவலூரில் பிறந்த நாவலூரான் என்பவன்; வன்மைகள் பேசியதற்காக இறைவனால் வன்றொண்டன் என அழைக்கப்படுபவனுகும் நம்பியாரூரன் சுந்தரன் இங்குரைத்த நல்ல தமிழ் இவற்றை இறைவன் திருவடிமுன்னாக பத்திமையுடன் இருந்து ஓதவல்ல அன்பர்கள் சிவனோடு கூடுவார்கள்.

வேதியர் என்றது வேதங்கள் நான்கினையும் கற்று உணர்ந்தவர் என்பதாகும். வேதங்கள் அவரிடத்து தங்கப்பெற்றவர். வேதங்கள் உலகியல் பொருளான மண் பொன் பெண் என்ற மூவகைப் பாசங்களையும் பற்றறுத்து சிவனே பரமெனபற்றேதும் இல்லாத அப்பரமனையே பற்றும் படி அவனது இயல்பு சொல்லின. இல்லறம் துறவறம் என இருவகை அறத்தினையும் வகுத்து இருவகை அறத்தினரும் எவ்வாறு சிவனை அடைவது என்ற விதி விலக்குகளை மொழிவன. மனம புத்தி சித்தம் அகங்காரம் இவைகள் புலன்களால் எவ்வாறு மாசுபடுகின்றன என்றதையும் புலன்களை வென்று உள்ளாக உண்மைப்பொருளை உணரும் உணர்ச்சிபற்றி விரித்தோதுவன. ஆனதினால் வேதத்தின் கல்வி எல்லா அந்தணர்க்கும் பொதுவாக விளங்கலின் வேத வேதியர் என்றனர்.

வேத நீதியர் என்றது வேதங்கள் சிவனைப்பற்றிடும் அந்தணர்க்கு ஒழுக்கங்கள் விதித்தன. அவை தான் செம்மையாவது திருநீறு. அது பசுவின் சாணத்திலிருந்து பெறப்படுவது! அதனை முறைப்படி பெற்று பொய் நீங்கி வாய்மை கடைப்பிடித்து அணிவது இதுவன்றி திருநீறு அணிவார் யாவரும் சிவனுடைய பொருளாவர் என்ற கோட்பாட்டில் உயர்வு தாழ்வின்றி வாழும் ஒருமைப்பாடு.

அடுத்து உலகியல் மக்களைப் போல் பிறந்தாலும் பூநூல் அணிவதனாலே இருப்பிறப்பாளர் என்னும் சிறப்பினைப் பெற்றுக்கொண்டது.

அந்த பூநூலை தரித்து அது சிவனணியும் வெண் நூல் என எண்ணி தாம் சிவநெறியில் எக்காரணம் கொண்டும் வழுவாது உலகில் தரும சொரூபிகளாக விளங்கலே இரு பிறப்பின் சிறப்பு. உலகில் ஏனைய மக்கள் மூர்க்கம் இவை முதல் பழுதுகள் கொள்ளினும் நூல் அணிந்தார் மூனிவு ஏதும் இலாது வாழ்தல் அவசியம். அத்தகைய உணர்ச்சி இன்னுமொரு வேத நீதியாகும்.

வேதங்கள்நித்தலும் அந்தணர்கள் தமக்குரிய பெருங்கடனாக அக்கினி வளர்த்து அதனைச்சிவமாகப் பூசித்து வரும் படி விதித்தன இந்த அக்கினி மழையை வருவிப்பதும் தேவர் பிதிர்கள் இவர்க்கு அவிமூலம் உணவூட்டுதலும் ஆகவிளங்குவதால் இதனை ஆகவனீயம் காருக பத்தியம் தக்கிணுக் கினியம்(தென்திசைஅக்கினி) எனும்மூவகை அக்கினிகளையும் நித்தலும் வளர்த்து அந்த அந்த அக்கினியில் தென் புலத்தார் தேவர் தெய்வங்கட்கு ஆகுதி செய்யும் படி வேதங்கள் இந்த அக்கினிகளை விளக்கிகூறின அதன் படி ஒழுகல் இன்னு மொரு நீதியாகும்

எல்லாம்அறிந்தேன் எனஇராமல் நான்கு வேதங்களையும் ஓர் தகுதியான குருவிடம் பத்தியான வழி ஒழுகி கற்பது முறை; இதுவும் ஓர் நீதி ஆனல் இன்று வேதநீதி விளங்கிய ஒரு குருவை தேடுவது மிக்ககடினமாக உள்ளது வேதமுறைப்படி கற்பதென்றால் முறையாக ஒழுகிடும் ஒரு குருவையே அடைய வேண்டும்

அடுத்து அந்தணர் புலன்களை அடக்கி ஆள்தல் ஒரு நீதி. கண்ட காட்சி கொண்ட கோலம் இவைகளை எண்ணாது வேத நெறிக் குரிய வழிநற்காட்சிகளைக் காண்டல் உணவில் தூய்மை கேள்வியில் நல்லவை கேட்டல் சயனம் வாசனை இவை யாவும் புலன்களை பழுதாக்கி அவைவழி இழுத்திடாது இருக்க முயலுதல் நன்மை தருவன.

இன்றுசினிமா வானொலி இரண்டும் உண்மையான வேநெறியின் நீதிவிளங்கும் எந்த அந்தணர்க்கும் ஆகாது. சினிமாவும் வானொலியும் அந்தணருடைய காதையும் கண்ணையும் பழுதாக்கும் ஒன்று.காலில் செருப்பு கண்ணுக்கு கண்ணாடி மோட்டார் கார் ஸ்கூட்டர் கைவாச்சு இவை எல்லாம் புலன்களை மாசுபடுத்தும் செய்கைகளாகும்

அந்தணர்க்கு வேதங்கள் கூறிய நீதியில் விசேடமாவன ஆறு தொழில்கள். அவையாவன வேதம் ஓதுதல் பிறரையும் ஓதச்செய்வித்தல் யாகம் செய்தல் யாகம் செய்வித்தல் தமதிடத்துள்ள பொருளை இல்லாதவர்க்குக் கொடுத்தல்தமது வேதநெறிக்கு வேண்டிய பொருளை பிறரிடம் பெறுதல் இவைகளாகும்

இதிலே ஓதல் ஓதச்செய்தல் இரண்டும் விசேடமானவை. எந்த ஒரு அந்தணரும் தான் கற்ற வேதக் கல்வியை பிறருக்கு கபடம் ஏதும் இன்றி சொல்லிவைத்தல் தருமமாகும் என வேதங்கள் வலி உறுத்து கின்றன. இதனை எல்லா அறவாணராகும் அந்தணரும் உணர்தல் அவசியம். இந்த ஒரு ஓதல் ஓதச் செய்தல் இரண்டும் நடைமுறையில் இல்லாத ஒன்றாகவந்துளது

யாகம் செய்தல் செய்வித்தல் இவை இரண்டும் உலக சேமத்தின் பொருட்டாகும். யாகம் பற்றி முன்னரும் தெரிவித்துள்ளோம் அதன் சிறப்பு பற்றி அவ்விடம் காண்க ஈதல் ஏற்றல் ஆனஇவை இரண்டும் உலக நலம்பொருட்டேயாகும். ஈதல் தருமம் அதேபோல் ஏற்றலும் அந்தணர்கட்கு ஒர்தருமமாகும்

## அனனதானம் செய்வதே மிகச்சிறந்தது என்றார் யோகசுவாமி

சுண்ணாகத்தில் சட்டத்தரணியாகக் கடமை ஆற்றும் திரு. தம்பிரட்னம் அவர்கள் சைவநெறியில் தமது சிவன் சோவிலில் பல தொண்டு புரிபவர்.

கதிரமலைச் சிவன் கோவிலை நன்முறையில் நடந்த மிகவிருப்ப முடையவர் அவர் என்னிடம் இச்செய்தியை ஒரு நாள் தேரிவித்தார்.

அவர் சொன்னார் நான் பாருங்கோ ஒரு நாள் சிவன் கோவிலிற்கு சென்ற நேரம் யோகசுவாமியும் அந்த நேரம் கோயிலடியில் வாந்தார் என்னைக்கண்டதும் நல்ல வடிவாக கட்டி உள்ளீர்கள் இதிலை நல்லாய் சோறுசமைத்து எல்லாருக்கும் கொடுங்கள் என்றார்.

சுவாமி சென்னபடி நாங்கள் ஓர் அன்னதானத்துக்கு ஏற்பாடு செய்தோம் பெருமளவு அரிசி பொருள்கள் சேர்ந்து கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்குமேலே சாப்பிட்டனர். உண்மையில் பாருங்கள் சுவாமியின் அருள் என்று நினைக்கிறேன் சோறு நன்றாகப் பொலிந்தது கறிகளும் மிகுசுவையாக இருந்தன. வந்த மக்கள் அனைவரும் திறுத்தியாகச் சாப்பிட்டனர் சுவாமி சொன்னபடி பலதடவை நாம் இந்தஅன்னதானத்தைக் கோயிலில் புரிந்ரோதம் என்றார்

இதைத்தான் சுந்தரர் பெருமான் 'நறுநீரொடு சாறு கிறிபேசி நின்று இடுவார் தொழுகேதாரம் எனிரே' என்கீறார் ஆகலினலே அன்னதானம் எத்துணைச்கிறப்பு எண்ணிப்பாருங்கள்

## மாதுளம் பழமும் யோகசுவாமியும்

யோகசுவாமியிடம் மாதுளம் பழத்தை சிலர் காணிக்கையாகக் கொடுத்தால் அதை கொண்டு சென்று கஸ்தூரி முத்துக்குமாரு வைத்திய சாலையாரிடம் கொடுப்பார்.

இதன்தொடர்பாக கொழுபுத் துறையைச் சேர்ந்த அன்பர் ஒருவர் சுவாமிபற்றிய கதை சொன்னார்

ஆநந்தநடேசக்குருக்கள் என்ற ஒருவர் திருநெல்வேலிச் சிவாலயத்தில் தொண்டு செய்து வருபவர் அவரிடம் பலர் நோய் நீக்கம் சோதிடம் முதலியதிற்காக செல்வதுண்டு.குருக்கள் தமது கடமையை தொண்டு தருமம் என்று கருதிச் செய்வதேயன்றி ஒருபோதும் அதை வியாபாரமாகக்கருதிச் செய்வதில்லை

பல வருடங்கட்கு முன்பு ஒரு நாள் ஆநந்தநடேசக் குருக்களும் அவர் மாமனுமாக ஒற்றைமாட்டுத் திருக்கல் வண்டியில் எங்கோ சென்று திரும்பிவரும் வேளை குருகக்ளிடம் மூன்று மாதுளம்பழம் கிடைத்தன, அதையும் பெற்று குருக்கள் வண்டியில் வரும்போது யோகசுவாமி எதிராக வந்தார்.

யோகசுவாமியிடத்து குருக்கள் மிகுபக்தி உடையவர் ஆனதினலே குருக்கள் சுவாமியைக் கண்டதும் வண்டியை நிறுத்தி கீழே இறங்கி சுவாமிக்கு மரியாதை செலுத்தி தம்மிடம் இருந்த மூன்று மாதுளம் பழத்தையும் சுவாமியிடம் கொடுத்தார்

சுவாமி குருக்களை நோக்கி ஐயா மாதுளம்பழம் எனக்கு இப்போ தேவையில்லை இது கஸ்த்தூரி முத்துக்குமாருவுக்குத் தேவைப் படுகிறது அங்குசென்று இதைக்கொடும் என்றார் அதைக் கேட்ட ஆநந்தநடேசக் குருக்கள் சுவாமியிடம் விடைபெற்று அவர் சொன்னபடி தமது வண்டியை நேரே வைத்தியர்முத்துக்குமாரு இல்லத்துக்குச் செலுத்திஅப்பழத்தை எடுத்துச்சென்று வைத்தியரிடம் கொடுத்தார்.

உடனே வைத்தியர் முத்துக்குமாரு குருக்களை நோக்கி ஏன் ஐயா இப்பழத்தை இப்பொழுது கொண்டு வந்தீர்? யார் இதைஎனக்குக் கொடுக்கச் சொன்னது? சொல்லும் என்றார் அப்போது குருக்கள் முத்துக்குமாரரை நோக்கி யோகசுவாமி உங்களிடம் கொடுக்கச் சொன்னார் என்றார்

உடன் வைத்தியர் முத்துக்குமாரு குருக்களை நோக்கி ஐயா ஓர் உயிரைக்காப்பாற்ற விசேடமான மருந்தொன்று செய்ய மாதுளம்பழம் தேவைப்பட்டது தேடிக்கிடைக்காமல் வருந்தி நின்றேன். இது சுவாமிக்கு தெரிந்து போய் விட்டது எனக்கூறினார், சைவம் திருநீற்றுப் பூச்சா இதுவன்றி பிறர்க்குதவலா எண்ணிப் பாருங்கள் கோவில் கும்பிடப் போன சம்பந்தர் விடத்தால் இறந்தவனை எழுப்பிவிட்டுப் போனதின் காரணம் என்ன? சைவத்தில் முதல் தருமம் தான் பெரிது கும்பிடுவதிலும் தருமம் பெரிது.

## நீர் கற்றதை கபடமின்றி பிறர்க்குச் சொல்லிக் கொடும் என்றார் யோகசுவாமி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் இப்படித் தம்மிடம் யோகசுவாமி கூறியதாக என்னிடம் தெரிவித்துக் கொண்டார். விரிவுரையாளர் தொடர்ந்து சொன்னார் தானும் தனது தாயாருமாக யோகசுவாமியிடம் சென்றிருந்த நேரம் சுவாமி யாரையோ கொண்டு 'திருக்குர்ஆன்' வாசிப்பித்துக் கொண்டிருந்தார். நாங்களும் அதைக் கேட்டிருந்தோம். அந்த வாக்கியம் சுவாமி மொன்ன வாக்கியமாகவே இருந்தது. நபிகள்நாயகம் உலகமக்களுக்கு தான் கற்றதை சொல்லி வைத்தல் தருமமாகும் அதில் கபடம் செய்யக்கூடாது என்று கூறியபகுதியை சுவாமி என்னிடம் கூறி நீரும் ஓர் பட்டதாரியானவுடன் கபடமின்றி கற்றதை பிறர்க்குச் சொல்லிக் கொடும் என்றார்.

சுவாமி சொற்படி நான் கணிதப்பகுதியில் விசேடசித்தி பெற்று பட்டதாரியாகப் படிப்பிக்கத் தொடங்கியதும் என்னிடம் வரும் மாணவர்களுக்கு நான் கற்றதை இலவசமாகச் சொல்லிக் கொடுக்கிறேன். இன்று எட்டு வருடமாகின்றன. இற்றைவரையும் நான் இதில் தவறு செய்வதில்லை எனக் கூறினார் யாழ்ப்பாண பல்கலைக் கழக விரிவுரையாளர்.

## எங்களுக்கு உயர்வு தாழ்வு இல்லை

இப்படியாக யோகசுவாமி நேரில்என்னிடம் சொன்னார்: யோகசுவாமி பெரியவன்; நான்சிறியவன்; என்னை சுவாமி மதியார் என்ற நினைப்பு சில வேளை என்மனதில் இருப்பது; பெரிய வரைகவாமி மதிக்கும் என நினைந்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேன்: அதனாலே தான் என்னை சுவாமி கண்டபடி ஏசுவார் என எண்ணிய என்னை ஒரு நாள் பார்த்து நாங்கள் உயர்வு தாழ்வுகாணபதில்லை என்றார். இதனை திருநாவுக்கரசர் இரண்டாட்டல் ஒழிந்து ஈசன் திறமே பேணிஎன்கின்றார். இதை எந்த தமிழர் உணர்வார்.

# ஊரமப் பித்தும் காசுப் பிழையும் காந்தீயத்தில்! கதர் கட்டி யோரின் பதர் வேலைகள்

காந்தியக் கொள்கையால் நாட்டிற்கு நலம் புரிபவோம் சேவை செய்வோம் என்றெல்லாம் வெளிப்படபேசி பலகாலம் பெரும் தம்பட்டம் அடித்து வந்தனர் கதர் கட்டிய காந்திபத்தர்கள்

காந்திபத்தர் என ஊர்பேச பெரும் சேவை செய்வார் எனக்கருதப்பட்டவர் நீர்வேலியைச் சேர்ந்த கரசி வேலாயுதபிள்ளை

ஆனால் பல ஆண்டுக்கு முன்புதொட்டு நமது கருத்து கதர் கட்டியவர் பலரும் கதருள் மறைந்து பல பழிவேலைகளைச் செய்தாலும் உலகம் தம்மை பெரிதாக மதிக்கும் என்றநோக்கத்தில் கதர் கட்டினர்என்றதாகும்

ஆனல் பெரும் பெருந் நறவிகள் ஆசிரியர்கள் அரசாங்க சேவகத்தினர் பலரும் கதர்கட்டி சுதந்திரகீதமும் சேவைகீதமும் பாடிட நாம் அது கண்டு எப்பவோ ஒரு நாள் இவர்களின் உண்மை வடிவம் வெளிப்படுமே என எண்ணி இருந்தேன்; எனது எண்ணம் இப்போது சரிஎனும்படி தற்போது காந்தியசேவா சங்கத்தை தம் சுயநல தேவைக்கு பாவித்துவந்ததாக காந்திபத்தர்களின் சேவை காட்டி உள்ளது

சில ஆண்டுகட்கு முன்பு ஒரு நாள் யோகசுவாமி முன்னக பிரமச் சாரியான ஒரு காந்திபத்தரை சுவாமிமுன் கூப்பிடட்டா என இன்னு மொருபிரமச்சாரி கேட்ப யோகசுவாமிகையைக் காட்டி வேண்டாம் என அவரை அனுப்பச் சொன்னது நல்ல ஞாபகமாக இருக்கிறது

சில ஆண்டுகட்கு முன்னர் பக்தர் ஒருவர் காந்திசேவகசங்கத்தை தனதென்றும் நினைத்து அப்படி நடப்பவர் நீர்வேலியில் காந்திஇல்ல நெசவு ஆசிரியை ஒருத்தியிடம் தனது காமச்சேட்டைகளை வைத்தலும் அப்பெண் தும்புக்கட்டையால் இரண்டு கொடுத்தவரலாறுஉண்டு: ஆனல் காந்திபத்தரினல் பெறக்கூடிய பொருளாதார சிறப்பை முன்னிட்டு சிலபெண்கள் பிரமசாரியின் விருப்பங்களையும் பூர்த்திசெய்ய இணங்கி உள்ளார்கள். அப்படியான ஒரு பெண் ஓர் வைத்தியருடைய மனைவி தற்போது கிளிநொச்சி அநாதை இல்லத்தில் தங்கிவருகின்றார்

அதுவன்றி பொதுச்சேவைக் காகத் திரட்டப்பட்ட பணத்தில் தன் சேவைக்காக [கிணறு] ஒன்று வெட்டிய தலைவர்களும் உண்டாம்.

அக்கராயனில் பெற்ற 300 ஏக்கர் நிலமும் செய்கை பண்ணப்படாது திருத்தவேலைகள் நடைபெறுது நான் நீ என்ற சங்கடத்தில் ஆர் இக்காணி மூலம் சுய நலம் பெறலாம் என்றவகையில் சங்கடப்பட்டு இப்பொழுது வழக்குகளும் நடைபெறுகின்றன.

காந்திபத்தரின் நடைமுறைச்சீர் கேட்டை விசாரிக்க ஓர் விசாரணைக் குழுவை நியமித்து அந்த விசாரணைக்குழு காந்தி பக்தர் ஒருவரின் தவறுகளைக் காண்பித்து ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அநாதைஆச்சிரமங்கள் மூன்றில் பெரும் அநீதிகள் தலை தூக்கியுள்ளன. அங்கு நான் நேரில் சென்று பார்த்தேன். பெரும் கவலையாக இருக்கிறது என்று விசாரணைக் குழுத் தலைவர் ஒருவர் என்னிடம் கவலைப் பட்டார்.

யார் தான் கவலைப்பட்டென்ன? காந்திபத்தர் மண் பெண் பொன் மூன்றுலும் பீடிக்கப் பட்டுள்ளார்; அவரைத் திருத்துவது மிகமிகக் கடினம். ஒருவன் உண்மையுடையவனக இருந்தாலல்லவோ அவனது தவற்றை அவன் ஏற்பான். தெரிந்து கொண்டு பிழை செய்பவன் அவன் ஒரு உலுத்தன். ஆகவே உலுத்தனை உணர்ந்து மீண்டும் அவனது உலுத்தனத்திற்கு உதவாமல் இருப்பதற்கு கொழும்பில் காசை வைத்து இல்லாதவர்க்கு கொடுக்க மனமிலாது காந்திபத்தர் போன்ற ஏமாற்றுக்காறருக்கு கொடுக்கும் கொழும்புக் கொடைஞரும் கல்லூரிகளும் சிந்திக்கவேண்டும்.

காந்திபத்தர் இந்தக் காசு விடயத்தில் பல மதடி வித்தைகள் செய்து கணக்கே காட்டாமல் பொதுக் கூட்டம் நடத்துகிறர். உண்மையில் காந்தியமென்பது இன்று மக்கள் சீ இது ஏன் இப்படியானது என வாந்தி எடுக்கும்படி உளதே!

# அநாதை ஆச்சிரமங்கள்

பொதுவாக இன்று அநாதை ஆச்சிரமங்கள் என்பது எல்லாப்பழி பாவங்கட்கும் ஏற்ற ஒரு இடமாக வந்துள்ளது! பெரும்பாலும் இன்று பணிப்புலம் கிராம சந்நியாசிகள் கோவில் பேரில் மடங்களின் பேரில் தண்டுவதும் தண்டும்காசில் தாமும் குடும்பமும் சீவித்திடும் தன்மை போல பல அநாதை ஆச்சிரமங்களை உண்டாக்கி அது ஓர் வியாபாரமாகக் காணப்படுகிறது.

இந்த ஒருமுறையை விடுத்து தென்ஆபிரிக்காவில் முன்பு நடந்த அடிமை வியாபாரம் மிகவும் மோசமில்லை என்றவகையே நான் நினைக்க வேண்டியுள்ளது.

நமது நாட்டில் கோவில் பேரில் கோபுரம்கட்ட தேர் செய்ய காசு கேட்டால் பதினயிரக்கணக்கில் கொடுப்பான்; ஆனல் அடுத்த வீட்டில் ஒருவன் பட்டினியாய்க் கிடந்தாலும் திரும்பிப்பாரரன். இது இக்காலத்துக் கொடைஞரின் சிறப்பு!

ஆனல் முன்புள்ள நமது மூதாதைகள் இப்படியாகப் பேருக்கும் புகழுக்குமாகப் பணம் கொடுக்கவில்லை. பதில் தத்தமது கிராமத்தில் வீடின்றி உணவின்றி உழைத்திட வழி இன்றிவாழும் மக்கட்கும் அறந்தலை நின்ற அறவோர்க்கும் கொடுத்து வந்தனர்.

இதனை சுந்தரர் பெருமான் கிறிபேசி இடுவார் என தமது பதிகத்தில் கூறுகிறர். வறுமையால் பிணியால் உழைப்பின்மையால் வாடும் மக்கள் மானத்தால் வெட்கத்தால் வாங்க மறுத்தாலும் இந்தா வைத்திருந்து சா[illegible] என்று [illegible] செய்து கொ[illegible] பலர் நினைக்கலாம் நாம் பலதை

யும் ஒரு சேரக்கண்டிக்கின்றோம் என்று! ஆனல்யார் எது கூறினும் நாம் சொல்லாதிருந்தாலும் பலருக்கு இந்த உண்மைகள் தெரியும்.

காந்திய சேவா சங்கத்தின் மூன்று அநாதை ஆச்சிரமங்களிலும் அந்த அநாதைப் பிள்ளைகள் மிகக் கொடுமையாக நடத்தப்படுகிறர்களென நேரில் கண்ட பலர் செய்து தெரிவிக்கின்றனர்.

கைதடி சைவ அநாதை இல்லத்தில் அநாதைப் பருவப்பெண் ஒன்றும் காரியாதரிசியும் இரவில் அங்கு தங்குவதை நேரில் காணக்கூடியதாக உள்ளது கொடிவிற்பனையில் பிழைகள்பல.

காந்திசேவாசங்க அனதைப் பிள்ளைகள் காந்திபத்தர் ஒருவரால் பொய்பேசப் பயிற்றப் படுகிறர்களாம், இப்படியாக அநாதை ஆச்சிரமங்கள் பலவும் ஊழல் நிறைந்த வியாபாரமாகின்றன.

# சந்திரதீபம் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்யும் பணி

நடேஸ்வராக் கல்லூரி
காங்கேசன்துறை
சந்திரதீபம் ஆசிரியர்
அவர்கட்கு ஐயா,

தாங்கள் சைவத்திற்கும் தமிழிற்கும் செய்து வரும் தொண்டு கண்டு மகிழ்ந்தேன் சுயநலம் போட்டி, பெருமை, பதவிஆசை, பண ஆசை போன்றவற்றில் கிடந்துழலும் மக்கள் வாழ்கின்ற இவ்வையகத்தில் தங்களைப் போன்ற ஒரு பொது நல வாதியைக்கண்டு பெருமகிழ்ச்சியடைகினறேன்.

சைவமும் தமிழும் எங்கெல்லாம் தாழ்வுறச் செய்யப் படுகின்றதோ கோயில் கிரியைகள் எங்குபிழையாக நடாத்தப் படுகின்றதோ எங்கெல்லாம் உள்ளவர்கட்குமேன்மைகொள் சைவத்தின் சிறப்பை தீந்தமிழின் சுவையை எடுத்தியம்பி அவர்கள் விடும் பிழையைச் சுட்டிக்காட்டி அவர்களை நன்நிலைக்கு உயர்த்தும் தங்கள் கொள்கை கண்டு பெரிதும் உவகை கொள்கின்றேன்.

பரமேச்சுரனின் முக்கண்ணிற்கும் உதரணமாகக் கூறப்படும் கந்தபுராணம் பெரிபுராணம் திருவிளையாடல் புராணம் ஆகியனவற்றில் கந்த புராணத்திற்கு உரை எழுதிக் கொண்டு இருக்கும் தாங்கள்திருவிளையாடல் புராணத்துக்கும் உரை எழுத வேண்டுமென்பது அடியேன் ஆசை யோகர் சுவாமிகளிடம் அனுக்கிரகம் பெற்ற தாங்களே அதைச்செய்து முடிக்க வேண்டும் என்பது என் அவா தங்கள் சந்திர தீபத்திற்கு நான் ஒரு வருடசந்தா கட்டுகின்றேன் இத்துடன் 50ருபாவுக்கான மணி ஓடரை இணைத்துள்ளேன்.

இப்படிக்கு
சி.உ.மைபாலன்

# பெருமாள் கோயில் பிரளிகள்
## நடவாத கூட்டத்தில் தீர்மானம் எடுக்கலாமா?

சந்திரதீப ஆசிரியர் மூலம்,
தலைவர் அவர்கட்கு
ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் ஆதீன மகா சபை
யாழ்ப்பாணம்

ஐயன்மீர்

31—5—80ல் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் நான் சபை ஒழுங்குகளை மீறியதாகக் காரணம் காட்டி என்னை இரண்டுவருடங்களுக்கு சபை நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு தடை விதித்திருக்கிறீர்கள், இத்தடையுத்தரவு 31.5 80ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டதாக அறிந்தேன். தடையுத்தரவுத் தீர்மானம் அங்கு நிறைவேற்றப் படவில்லை. சபைக்காரியாதரிசியின் கற்பனையில் எழுதப்பட்ட அறிக்கையே அந்தத் தடையுத்தரவுத் தீர்மானமாகும். எனக்கு நிர்வாகசபைக் கூட்டங்களுக்கு ஏன் அறிவிக்கப் படுவதில்லை என்று நான் கேட்ட பின்பே மேற்படி தடையுத்தரவுக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். நான சபையில் நீங்கள் செய்யும் முறைகேடான நடைமுறைகளை ஆட்சேபித்ததற்காகவே, திட்டமிட்டு நீங்கள் எனக்குத் தடையுத்தரவு வழங்கியுள்ளீர்கள். எனது ஆட்சேபனைகளைத் தெரியப் படுத்தும் சந்தர்ப்பங்கள் எனக்கு மறுக்கப் பட்டுள்ளன. ஆகவே நான் எனது ஆட்சேபனைகளையும் குறைபாடுகளையும் ''சந்திரதீபம்'' பத்திரிகை மூலமாக தங்களிடம் சமர்ப்பிக் கின்றேன். இப் பத்திரிகை மூலமாகவே தாங்களும் எனக்குப் பதிலைத் தருமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

20.9.80 இல் நடைபெற்ற தேர்த் திருவிழாவிற்கு ஐந்து தத்துவக்காரர் சங்கற்பம் செய்ய வேண்டுமென்ற நியதியை நீங்கள் இம்முறை உதாசீனம் செய்துள்ளீர்கள்.

தேர்த் திருவிழாவிற்கு நாதஸ்வர வாத்தியங்களுக்கு மட்டும் ரூபா 1500 உம் மொத்தச் செலவாக ரூபா 3500 வரை செலவு செய்யப பட்டதாக நான் அறிகிறேன். நீங்கள் நால்வரும் ஆளுக்கு ரூபா 250 வீதம் ரூபா 1000 மட்டுமே கோயிலுக்குச செலுத்தியுள்ளீர்கள். மிகுதிப் பணம் ரூபா 2500 உம் கோவிற் பணத்திலா அல்லது வேறு எவ்விதம் செலவு செய்தீர்கள்?

ரூபா 350 பெற்றுக் கொண்டு இரவுத் திருவிழா செய்கிறீர்கள். ஒரு திருவிழாவை ரூபா 1000க்குக் குறைவாக இக் காலத்தில் செய்ய முடியாது, என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இருந்தும் நிருவாகசபையில் இருக்கும் ஒரு சில திருவிழாக் காரர்களுக்காகவும் நீவிர் நால்வருக்காகவும் திருவிழா உபயப் பணத்தைக் கூட்டாதிருக்கிறீர்களா?

தயவு செய்து இவற்றிற்குரிய பதிலை எனக்குத் தெரியப் படுத்தவும். அந்த் க்கள்விகளை அடுத்து வரும் சந்திரதீபம் வெளியீட்டில் நான் சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு
செ. இரத்தினகோபால்
73, கன்னாதிட்டிவீதி
யாழ்ப்பாணம்

# ஏழு செவ்வாயால் பல பெண்கள் பழுது

துர்க்கை கோயில் ஏழுசெவ்வாய் பிரச்சனையால் பல பெண்கள் பழுதாயினர். நீர்வேலியில் ஒரு பெண் க[illegible]டு பின்பு கிணற்றில் வீச்சு! கீரிமலைப் பகுதியில் ஒரு பெண் கணவனில்லாமல் பிள்ளை இன்னு மொருபெண் பேரால் காதலன் கள்ளன் எனத் தொண்டர் படையால் கொலை. குருக்கள் கும்பிடப் போன பெண்ணுடன் உடலுறவு. இப்படிப் பல பழுதுகள் நடைபெற்றன? இதுதானு சைவபரிபாலனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராமணர்கள் தமது காடைத்தன மூலம் தம் பிழையை மறந்து நடக்கின்றனர்.

வட்டு கிழக்கு
வட்டுக் கோட்டை
பேன்லம தங்கிய திருவாளர்
சந்திரதீப ஆசிரியர்
வை. நல்லையா அவர்கட்கு

முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமத்தைக் காத்து தவத்தை பெருக்கி சிவத்தைப்பேணி சைவம் வளர்க்கும் சமயப்பத்திரிகையான சந்திரதீபத்தை மாதந்தோறும் படிப்படியாக பார்ப்பவனில் நானும் ஓர் அன்பன். இப்படியான தமிழ்ப் பத்திரிகையை நமது படிப்பகத்துக்கு மென் மேலும் எடுப்பதற்கு நாமும் பெரு முயற்சியளித்து எடுப்பதற்கும் முன்வரவுளோம். இருந்தாலும் இக்காலத்து முக்கியமாக பிராமண இளைஞர்களோ தமது அகோர வெறியினுல் தமது காடைத்தனமூலமும் தம்பிழையை மறந்து பிறர் மீது தாவிக்குதிக்கின்றனர்.

சென்ற மாதம் 4—10—80 சனிக்கிழமை சித்தங்கேனி சிவசிதம்பரேஸ்வர ஆலயத்திற்கு நானும் எனது மனைவியும் இருபிள்ளைகளுமாகச் சென்று எள்ளுப் பொட்டணி அருச்சனை செய்வதற்காகச் சென்று சிவபெருமானை வணங்கிய பின்பு கிரகங்களின் முன்பு வணங்கியபிற்பாடும் எள்ளுப்பொட்டணிச் சட்டியையும் 4ஐ எரிய வைத்தோம். பின்பு அருச்சனை செய்வதற்காக பூசகரை அழைத்தோம் அப்போது அவ்விடத்திலேயே ஓர் விபரீதம் நடந்தது.

எமது கிராமத்திலே சிவன் ஆலயம் சித்தன்கேனியில் தான் மிகவும் அண்மையில் உள்ளது. ஆனபடியினுல் கிரகப்பாவநிலை நன்ருயின்மையினுல் கிரகதோசமாக இருந்த படியினுலும் அங்கு சென்ரேம் அப்போது அவ்விடத்தில் ஓர் வயது முதிர்ந்த குருக்கள் ஒருவர் வந்து எனது மனைவியிடம் நெருங்கி 'என்னனை என்னனை' ஏன் நிற்கின்ருய் என்று கேட்டார் நான் நவக்கிரகம் 9க்கும் சிவபெருமானுக்கும் நந்திக்கும் 9 குடம் தண்ணீர் ஊற்ற வேண்டுமென்று கூறலானேன். கூறிக்கொண்டிருக்கும்போது உடன் அவ்விடத்திற்கு வந்த பிராமணன் எல்லாவற்றிற்கும் பொதுவாக 16 ரூபா தரும் படியாகக் கூறினுர். நான் உடன் கணவனை அழைத்து பணம் எடுக்குமாறு கூறவே அவரிடம் 12ரூபா 30சதம் இருக்கிறது என்று கூறி அந்த வெறி மூஞ்சி கொண்ட பிராமணனிடம் கொடுத்தேன். உடனே பணத்தைக் கொண்டு சென்று பின்னர் 4.5 மணிநேரமாக அந்த இடத்திற்கே வரவில்லை. அப்போது வேருேர் பூசகரும் ஓர் சிறிய பையனும் வந்த போது முன்பு கூறிய ஐயரை விசாரித்தேன் விசாரிக்கும் போது அந்த ஐயரும் வந்து விட்டார். அப்போது நான் ஐயா தண்ணீர் நந்திக்கு ஊற்றி பின்பு நவக்கிரகம் சிவபெருமானுக்கு அருச்சனை செய்து தாருங்கள் என்றதும் சாமான்களை எல்லாம் வாங்கியபின்பு மீண்டும் பணம் அருச்சனைக் காசு என்று கேட்டார். நானே சிறிது நேரத்திற்கு முன்பு தானே 12ரூபா30 சதம் தந்தேன் என்று தயவாகக் கூறலானேன். அப்படியிருந்தும் நான் எனது மகளிடம் கடலை வாங்குவதற்கு வைத்திருந்த பணம் 2.50 ஐயும் அந்த ஐயரிடம் கொடுத்தேன் உடனே அந்த ஐயர் 2 ரூபா 50 சதத்தையும் நந்திக்கு முன்னுல் சுழற்றி எறிந்துவிட்டார் பின்பு அருச்சனைச் சாமான்களையும் நந்திக்கு முன்பாக சிதறுதலாக அடித்துக் கொண்டு உள்ளே சென்று நைவேத்தியம் பண்ணுமல் சும்மாதீபத்தைக் காட்டிய பின்பு கொணர்ந்து வெறிகொண்ட மூஞ்சியுடன் விபூதிப் பிரசாதம் வைத்துத் தந்தார்.

அப்போது நானே ஒரு சிலருக்கும் கூறி சிவபெருமானை நோக்கி எல்லாப் பழியையும் அவரிடமே தீர்த்தழுதேன் உடனே கிரகத்துக்கு அருச்சனை செய்வதற்கு பணமின்மையினுல் பற்றுச்சீட்டும் பெறமுடியாமல் இருந்தது. எனவே இந்த மூர்க்கம் கொண்ட பிராமணன் யாரென்று அறிவதற்கு ஒரு சிலரை விசாரித்தேன். அப்போது அவர்கள் இந்தக்கோவில் பிரதம குருக்களான பண்டிதஞானக் குருக்களின்மகன் என்றும் அவர் பூசை செய்யும் முறையைப் பயிலாதமையினுல் பூசை செய்யத் தெரியாது என்றும் இக்கோவிலிலேயே தகப்பனுடன் தொட்டாட்டு வேலை செயவதென்றும் கூறியதுடன் இவருக்கு திடீரென கோபம் வருமென்றும் ஓர் வெறி கொண்ட சுடுதண்ணி மூஞ்சிக்காரன் என்றும் கூறினர்.

உடனே நாம் மாலை 4 மணி ஆவதால் ஒரு பூணூல் அணியாத பிராமணப் பையனிடமும் ஓர் பிராமணப் பெண் பிள்ளையிடமும் திருநீறு சந்தணம் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினேம்.

நானே ஒரு உப தபாலதிபராகக் கடமைமாற்றுபவன் ஆதலால் எனக்கும் மனைவி மக்களுக்கும் சனியனின் கிரகநிலை சரிவராமல் இருந்தபடியால் அக்கோவிலுக்குச் சென்றும் அருச்சனை செய்யமுடியாமலும் முதற்பகுதி காசை அம்மூர்க்கம் கொண்ட பிராமணியிடம் கொடுந்து பின்பும் இரண்டு முறை பணத்தைக் கொடுத்து காசு எறியையும் பார்த்தால் எனது மனம் வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போல் மனம் வேகிறது.

ஆகவே இப்படி ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்காத வெறிமூஞ்சி கொண்ட பிராமணர்களை ஆலயங்களில் வைத்திருப்பது மிகவும் முறையானதா? சமய சம்பந்தத்திற்கு மேலோங்கி முன்னேறி வருமா? அதைப் பார்க்கிலும் நாமே இனிமேல் வருங்காலத்திலும் சிறந்த தெரிவு செய்யப்பட்ட பிராமணர்களை வைப்பதற்கு தங்களாதரவு வேண்டுமே வேண்டும்.

எனவே இப்பிரசுரத்தை மதிப்புக்குரிய சந்திரதீப ஆசிரியர் அவர்களே! தங்கள்பத்திரிகையில் கூடிய சீக்கிரம் பிரசுரிப் பீர்களென்றே எனது எமது நோக்கமாகக் கொண்டு எதிர் பார்க்கின்றேன். மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

வணக்கம் நன்றி.
இப்படிக்கு
ஓர் அன்பன்
தபால் ஊழியன்

# பிச்சை எடுத்தது பெருமாள் பிடுங்கிச் சென்றது அனுமார்

ஐயா;

சில கோவில்களில் வசதியற்ற சீவியத்திற்கு உழைப்பற்ற படித்த பிராமண குருமார் பலர் இலைமறைவு காய்மறைவாக எங்கேயாவது எப்போதாவது தமது கோவில்களிலோ பிற கோவில்களிலோ விசேடங்கள் உற்ச்சவங்கள் நடந்தால் ஏதும் வயிற்றைக் கழுவக் கிடைக்கும் என நம்பி இலவுகாத்த கிளிபோல இருப்பார்கள். அச்சமயம் மிகச் செல்வாக்குள்ள பிராமண குருமாரும் ஆசாரிய குருமணிகளும் திடீரென்று பத்ததி வாசிப்பவர் முதல் கொண்டு எடுபிடி வேலைவரை கொந்தரார்த்துப் பேசி முடித்து தங்களுக் குரியவருடன் படை எடுத்து ஏழைப் பிராமணர்களின் எல்லைக்குள்வந்து அப்பிராமணர்களின் வாழ்க்கையை ஒரே நாளில் கரும்புத் தோட்டத்து யானை போல துவசம் பண்ணி அவர்கள் வயிற்றிலடித்து விட்டுத்தங்கள் பையை நிரப்பிக் கொண்டு போகிருர்கள். ஒருகோவில் ஐயர் ஏதும் தகராறு காரணமாக கோவிலை விட்டு விலக நேர்ந்தால் மறுபக்கம் இன்னெரு பூசகர் பின் வாசலால் நுழைய ரெடியாக நிற்கிருர். தகராறைத் தீர்த்து வைக்கவேண்டிய அவ்வினத்துப் பிராமணர் மாருகத் தான் நுழைகிருர். பிராமணனுக்குப் பிராமணன் குழி தோண்டுகிருர்கள் சில காலங்களில் சிவராத்திரி நவராத்திரி திருவாதிரை எப்போது நடத்துவது என்ற மோதல் ஏற்பட்டால் இதிலும் பிராமணர்களிடம் ஒற்றுமை இல்லை. சில சமயம் சிவராத்திரி திருவாதிரை இரண்டுமுறை வந்து இரட்டை வேடம் போடும் போதும் ஆளுக்கொரு கொள்கைப்படி செய்கிருர்கள். இதிலாவது சமரசம் காண்பதில்லை. பிறமதத்தவர் நம்மைப் பார்த்து ஏளனம் செய்கின்றனர். தகராறைத் தீர்க்கும் ஒரு நீதவான் கூட இருவளக்காழிகளையும் கோவிலில் போய் சத்தியம் செய்து விட்டு வாருங்கள் என்றனுப்பி வைக்கிருர். கோவிலோ அர்ச்சகரின் வசமுள்ளது; எனவே நீதிமன்றத்தைவிட மேலான ஒரு கோவிற்பூசகர் இப்படி நடந்தால்? இவர்களும் பிராமண குருமாரா கற்றறிந்தவர்களா?

இப்படிக்கு
ஓர் பொது நல விரும்பி

# கோயில் உள்ளும் புறமும் வியாபாரம் அறவே நீங்க வேண்டும்

சி. அருளானந்தன்
பனிப்புலம்
பண்டத்தரிப்பு

கனம்
சந்திரதீபம் ஆசிரியர்
அவர்கட்கு,

ஐயா,

உலகில் சைவம் சிறந்த முறையில் ஓங்கி வளர சந்திரதீப மூலம் சைவசமயத்தில் இழைக்கப் படுகின்ற தவறுகள் (சைவ நெறிக்கு அப்பாற்பட்ட செய்கைகளை) கண்டித்து மாசற்றரீதியில் சமயம் வளர அயராது பாடுபட்டு வரும் தங்கள் செயல் கண்டு மகிழ்ச்சி பொங்கும் அதே வேளையில் இன்று இந்து மக்களில் பெரும் பாலானேர் ஆலயங்களில் உற்சவகாலங்களில் கடவுளை வணங்குவதற்காகச் செல்வதற்குப் பதிலாக அங்கு சென்று தங்கள் தங்களுக்கு வேண்டிய அழகு சாதணப் பொருட்களையும் ஆடம்பரப்பொருட்களையும் வீட்டுப் பாவனைப் பொருட்களையும் பிடவைகள் உணவுப்பண்டங்கள் முதலியனவற்றையும் கொள்வனவு செய்வதற்கு உகந்த இடமாகக் கருதி நிறைவேற்றிவருவது கண்டு எமது சமயத்து மக்கள் எங்கள் பிறப்பின் பயனை உணராதவர்கள் போல் இந்த ஆலயங்களில் சிறப்பாக வருடா வருடம் நடைபெறுகின்ற உற்சவ காலங்களில் விதிப்படி கடவுளை வழிபடத்தவறி மேலே கூறிய கொள்வனவுகளுக்கு உகந்த இடமாகக்கருதி வருவது குறித்து அவர்களது இவ்வறியாமையை விளக்கி கிடைத்தற்கரிய இப்பிறவியின் பயனை பெற தங்கள் ''சந்திரதீபம்'' பத்திரிகை மூலம் அறிவு புகட்டி (கருத்துக்களைக்கூறி) மக்களை மேலும் மாசற்ற சமய நெறியில் ஒழுக வைப்பதோடு ஆலயத்தின் வழிபாட்டிற்கு ஒவ்வாத பொருட்களை ஆலயங்களில் வைத்து விற்பனை செய்கின்ற வியாபார நிலையங்களை அமைப்பதற்கு இலாப (வருமானம்) நோக்கம் கருதி அநுமதி அளிக்கின்ற ஆலய சொந்தக்காரர்களினதும் பரிபாலனசபையாரினதும் தவறினைத் தொடர்ந்து செய்யாவண்ணம் கருத்துக்களைக்கூறத் தங்களை வேண்டுவதோடு ஆலயங்களில் பக்தி பரவசிக்கத்தக்கவகையில் தவருன வழிகளை நீக்கி சம்பந்தப்பட்டோரை உதவி நல்கும்படி தயவாக இந்து சமயத்தின்சார்பில் மிகவும் மன்ருட்டமாக வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
ஓர் அடியான்
சி. அருளானந்தன்

மேற்படி விடயத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதோடு தங்களின் சிறந்த கருத்துக்களையும் தெரிவித்து சமயவளர்ச்சிக்கு மேலும் தங்கள் சேவையை நல்கும்படி தயவாகவேண்டி நிற்கின்றேன்.

# சகல பிழைகட்கும் பிராமணர்களா குற்றம்?

அன்பு சால் ஐயா:

தங்கள் சந்திரதீபம் கண்டேன் அதில் முதற்பக்கத்தில் முதல்வரியான விநாயகநம என்றசொல் பிழையாகும். விநாயகாய நம: என்றிருக்க வேண்டும். விநாயக நம என்னும் வடமொழியின் தமிழாக்கம் விநாயகர், வணக்கம்' என்ற இருபெயர்ச் சொல்லையே கொண்டு வினையைச்சேராது அந்தத்தில் நிற்கிறது. விநாயகாய நம என்ருல் விநாயகரின் பொருட்டு வணக்கம் அல்லது, விநாயகருக்கு வணக்கம் எனப்பொருள் படும் தமிழ் அருச்சனைப்புத்தகத்தை நோக்குமிடத்து சுமுகாய நம. கபிலாய நம விநாயகாய நம என்றிருப்பதைக் காணலாம் வடமொழியில் நாலாம் வேற்றுமைக்கு ஆறும் வேற்றுமையின் கருத்தும் வியாகரணபபடிவரும் அச்சுப்பிழையாயின் திருத்துக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பஞ்சாங்க பேதங்கள் பற்றி பத்திரிகையில் கண்டேன் இந்தப் பஞ்சாங்க பேதங்கள் வருடந்தோறும் ஏற்படும் கருத்து மோதல்களைக் கண்டு நானும் வருந்துகிறேன். பிறமதத்தவர் பூசையை விழாவை நோன்பைக் கொண்டாடும் போது ஒரு முகமாகச் சிந்தித்தே செயல் படுகின்றனர், இது நம்மவர் மத்தியிலிராததால் பிறமதத்தவர் நம்முடைய மதம் ஒரு வியாபார நோக்கமானதென மனதிற் கொள்ளும்படியாகிறது. இக்கோளாறு என்றுதான் திருமோ? கோவில் உற்சவ விடயங்கள் பற்றிப் பார்த்தேன். திருவிழாக்களை அந்த ஊர் மக்களோ நிர்வாகமோ புதிய பஞ்சாங்கம் வெளியாகு முன்பு பிரசுரிப்பாளரிடம் போய்க் கேட்க வேண்டும் அறிய வேண்டும். அதை ட்டுப் பிராமணர்களைப் பிராமணி என்று தூற்ற வேண்டியதில்லை. திரு செல்லப்பா அவர்கள் மாறுக அவர் கோவிற் காரரை அல்லவா திட்ட வேண்டும். சைவ பரிபாலன சபையிடம் கூறியும் அது நடக்கவில்லை என்றார். சைவபரிபாலன சபை போன்றசில சமயச்சபைகள் பெயரளவில் பிரகாசிக்கிறதேயன்றி பலஊழல்கள் இருக்கின்றன. எனவே பிராமணரை மட்டும் திட்டும் கொள்கையுடன் பத்திரிகை நடப்பின அது தனது சைவத்தைப் பேணும பத்திரிகை என்ற லட்சியத்திலிருந்து தவறி விடும். உதாரணமாக வடமேல் மாகாணத்தில் உள்ள சமயச் சபையொன்றில் நான் அங்கத்தவராயிருந்தேன். வருடாந்தக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். அது காரசாரமாக நடந்தது. ஒரு உறுப்பினர் எழுந்து தலைவரிடம் நமது சைவம் காக்கும்சபையின் விடுதியில் ஒரு உறுப்பினர் சைவச் சாப்பாடு பிடிக்காது மிலிட்டரிச் சாப்பாடு கொண்டு வந்துசாப்பிடுகிறார், எனவே இச்சபையின் பெயருக்கு மாறுக விசையங்கள் நடக்கிறது என்றார், தலைவர் உடனே மாமிச உணவு சாப்பிடுவோர் சபைக் கட்டடத்தில் கொண்டுவந்து சாப்பிடாது வேணுமானல் ஓட்டலில் போய்ச் சாப்பிடலாம் என்று சமரசப்படுத்தினர். எனவே பிராமணரல்லாத சிலர் தம்மைச் சைவமென்று பெயரளவில் கூறிப் பிரமணரைத் திட்டுவதில் பயனில்லை இதைச் செல்லப்பா உணர வேண்டும் அடுத்து கண்ணப்பர் என்பவர் பிராமணர்களைச் சண்டாளர்கள் என்ப் பத்திரிகையில் திட்டி உள்ளார். சைவத்தைப் பேணும் இவர்கள் எப்படி எனப் பார்ப்போம். சமீபத்தில் ஓர் காரியாலத்தில் சரஸ்வதி பூசை நடந்தது. ஐயர் வந்து சரஸ்வதி கும்பம் வைத்து சரசுவதி படத்திற்கு முறையே தியானம் ஆவாகனம் முத்திரைகள் காட்டி ஆறுதலாகச் செய்தார் செய்த சற்று நேரத்தில் ஒருவர் வந்து ஐயரே பூசையில் பிழையுள்ளதாக என்மனைவி கூறுகிறர். அவவுக்கும் வடமொழி தெரியும் என்றதும் ஐயர் திடுக்கிட்டார். காரியாலயங்களில் கோவில் போல பூசை செய்ய இயலாது, வெறும் யந்திரமில்லாத பிம்ப பூசைதான். பூசை முடிந்த சற்று நேரத்தில் ஐயர் ஆசீர்வாதம் சொல்லி பூசையில் பிழைகண்ட நக்கீரரை சரசுவதி தோத்திரத்தை பாடச்சொன்னர் தனக்கு இவை தெரியாதென்று மனைவியைப் பாடச் சொன்னர் மக்களைப் பாடச் சொன்னர், தெரியாதென்று விட்டனர் கடைசியில் ஐயர் ஒரு சகலகலாவல்லி மாலையையாவது பாடச் சொன்னர். அதுவும் தெரியாதென்றனர். பின்பு ஒரு தேவாரத்துடன் ஓப்பேறியது எப்படி நக்கீரரின் பாண்டித்தியம். எனவே கோவிலில் முறையே காசிகாண்டம் கந்தபுராணம் இவை மூலமும் உரையுமாக முன்பு ஊர்மக்களால் பாடப் பெற்றன இவை இப்போது அச்சிலுமில்லை. படிப்பதுமில்லை, சித்திர புத்திரர் கதை கூட இவர்களின் பிள்ளையள்களுக்குப் படிக்க வெட்கம். மாறுக மலிவுப்பதிப்பில் வெளியாகும் காமம் சொட்டும் புத்தகங்களே இன்றைய சைவர்களின் படிப்பு. கொழும்பில் ஒரு இளைஞர் தனது தகப்பனுரின் திதி செய்ய வேட்டி, கட்ட மறுத்து விட்டார். எனவே சைவம் கீழ் நோக்கிப் போகப் பிராமணர்கள் தான் காரணம் எனச் சாடுதல் சரியன்று. எத்தனையோ வருமானமுள்ள கோயில் களின் அறங்காவலர் கோவில்ச் சொத்தை வருமானத்தை வாயில் போட்டு இரவு பகலாகக் கஷ்டப்படும் பிராமண குடும்பங்களை மடப்பள்ளியிலே குடித்தனம் நடத்த வைத்து வாழ்கிறர்கள் குடும்பச் சேர்க்கை முதல் பிரசவம் ஆசௌசம் எல்லாம் கோயிலுக் குள்ளேயே அவர்கள் நடத்த வேண்டியுள்ளது. இது யார் குற்றம்?

இப்படிக்கு
அன்புள்ள
ஓர் வாசகன்

# சைவத்தில் வம்பும் துன்பும் என்று நீங்கும்

பேரன்பிற்குரிய சந்திரதீபம் ஆசிரியர் அவர்கட்கு

இக்கடிதத்தை எழுதும் நான் யார் எனத் தங்களுக்குத் தெரியாமல் இருப்பது நன்று என நினைக்கிறேன். நான் பணிப்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். தயவு செய்து இக்கடிதத்தை யார் கேட்பினும் கொடுக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் இதை எழுதியது யாரென இக்கடிதத்தில் சம்பந்தப்பட்ட நபர் என்னை அறிவாராகில் நான் இந்த் ஊரில் இருப்பது நன்றல்ல என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வதாகவே நான் நினைக்கிறேன்.

உங்கள் பத்திரிகையான சந்திரதீபம் அண்மைக் காலத்தில்சைவ மக்களிடையே ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியுள்ளது என்றே கூறவேண்டியுள்ளது. ஏனெனில் இன்றைய காலக் கட்டத்தில் சைவ ஆலயங்கள் தமிழர்பண்பாடு போன்றவற்றில் நுழைந்து கொண்டிருக்கும் அநியா அட்டூழியங்களை துணிவுடன் தத்ரூபமாக எடுத்துக் கூறுவதையிட்டு என்போன்ற அன்பர்கள் மகிழ்ச்சியடைகிறேம்.

இப்பத்திரிகையில் தொடர்ந்து பலகாலமாக வரும் எம்முடைய ஊரார் பற்றியதும், நமது அம்பாள் ஆலயம், நம்மூர் வேடதாரிகள் பற்றியதுமான செய்திகளில் சில உண்மை விடயங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். முதலில்நமது ஊரின் பெயரைச் சரியான முறையில் கவனிக்க. பனிப்புலமல்ல பணிப்புலம் என்பதே சரியானதாகும் பணி... புலம் இறை அடியார்கட்குப் பணி செய்வதற்கான காரணப் பெயருடன் உருவான ஊரே இந்த ஊர். இங்குள்ளவர்களை பண்டாரங்கள் என்று கூறுவது வழக்கம். உண்மையில் இவ்வூர் சாமிமாருக்காக ஏற்படுத்தப்பட்டது. இப்பண்டாரம் என்ற சொல் அச்சொல்லுக்கான புனிதத்துவத்தை இவ்வேடதாரி களால் பாழாக்கப் பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

முதலில் எமது ஊர் பற்றிச் சில வரிகள். எமது ஊரில் உள்ள பணிப்புலம் முத்துமாரி அம்மன் ஆலயம் மிகப்பழமை வாய்ந்தது. இங்கு முற்காலத்தில் வேள்விகள் நடைபெற்று பின் நிற்பாட்டப்பட்டது. இக்கோயிலிருந்து கொண்டு சென்ற கிடாய்வெட்டும் கத்தியைக் கொண்டுசென்று ஏற்படுத்தப்பட்டதே புளியங்கூடல் அம்மன் ஆலயமாகும். இப்போதும் இக்கத்தி அங்குள்ளது. அண்மைக் காலத்தில் இவ்வாலயம் மிகவேகமான முன்னேற்றத் துடன் வளர்ந்துள்ளது.

தற்போது இவ்வூரில்நரகாசுரன்என்றழைக்கப்படும் ஆர். பி. சுப்பிரமணியம் (புறாடி) என்பவரால் இவ்வாலயம் பூசைகள் எதுவுமின்றி பூட்டப்பட்டு நான்கு வருடமாகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

முன்பொருகாலத்தில் இவ்வாலய பூசாரிகள் என தங்களைக்கூறிக் கொண்டிருப் போருடன் குறிப்பிட்ட இந்தநபருக்கு பலத்தபகை ஏற்பட்டதன் காரணமாக பூண்டோடு அழிப்பேன்எனசபதஞ்செய்து அவரின்வீட்டைக்கொழுத்தி வைக்கநெருப்புடன் சென்று ஊரார் தடுத்து நிறுத்தியது நடந்தகதை. தற்போதுஇவர் அதே பூசாரி குடும்பத்தாருடன் சேர்ந்து ஆலய நிர்வாக சபைக்கெதிரான வழக்கை அவர்களின் சொத்துக்கள் பலவற்றை விற்று அவர்களை உண்டாண்டியாக்கி விட்டார்,

தற்போது இவர்களில் இருவர் மொட்டையடித்துக் கொண்டு உருத்திராக்கத்துடன் குடும்பி வளர்த்துக் கொண்டு தாம ஐயர்கள் எனக் கூறிக் கொண்டு ஊர் ஊராகத் தண்டலுக்குக் கிளம்பியுள்ளார்கள். இந்நால பொதுமக்களை நான் வேண்டிக் கொள்வதுஎன்னவெனில் இவர்களுக்கு எவ்வித நன்கொடைகளையும கொடுக்காதீர்கள் என்பதே. இவர்களைப் போன்றவர் களின் அநீதி அழிந்து நீதி நிலைநாட்டப்பட்டு அம்பாள் ஆலய மணியோசை எப்போது ஒலிக்குமென இவ்வூர் மக்கள் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறர்கள். தற்போது இவ்வூரில் இரண்டு பெரும் முன்னேறக் கழகங்கள் இயங்கி வருகின்றன. வளர்ந்து வரும் சமுதாயம் எதிர்காலத்தில் முன்னேற்ற மடைய வழிகள் உண்டு என்பதில ஐயமில்லை. இத்துடன் இங்கு மூன்று பாடசாலைகளும் ஒரு கைத்தறி ஆலை போன்ற முன்னேற்ற கரமான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றது.

இவ்வூர் சாமிகள் பற்றி வரும் சில கருதுதுக்கள் பற்றிக் கூற முற்படுகிறேன். இங்குள்ள சாமிகளென வரும் கள்ளர்கள், திருடர்கள், பகற் கொள்ளையர்கள். இவர்கள் விடியற் காலை தண்டலுக்கு வெளிக்கிட்டு பிற்பகலிலேயே வந்து விடுவார்கள். பின மாலையும் இரவும் ஒரே குடி கும்மாளம். இதை அறிவதில் தங்களைப் போன்றேருக்கு அதிர்ச்சியாய் இருக்கும். இது மட்டுமா? பெரும் பெரும் சூனியங்களுக்கென சிலஅப்பாவி மக்களின் தாலிக் கொடிகளையும் நகைகளையும் பறித்து வந்து விற்பதும் இவர்களின் திருவிளையாடலில் ஒன்று. இவர்களைப் போன்ற சாமிமாரால் ஆலயங்களுக்கு எவ்வித பயனும் கிடைப்பதில்லை. எனினும் பிரசித்தி பெற்ற சாமிமார்களில் மூவர் இவ்வூரைச் சேர்ந்தவர்களே

1. காலியிலுள்ள சிவராசா சாமியார்.
2. கதிர்காமம் பொன்னம்பலச் சாமியார் மடச்சுவாமி
3. திருக்கேதீச்சரம் நரசிங்கச் சாமியார்,

இவர்கள் தமது வருமானத்தில் தம் மில்லங்களைக் கவனிப்பதோடு ஆலயங்களிலும் சில தொண்டுகளாற்றுகின்றனர். இங்கு குறிப்பிட்ட முதலாவது சாமிக்கு மனைவி பிள்ளைகளுண்டு. இரு ஆண்களும் ஒரு பெண்ணும் ஆண்களில் ஒருவன் சுத்தக் குடிகாரன். அண்மையில் இவ்வூரிலுள்ள சிறிய வைரவர்ஆலயத்தை வெறியில் உடைத்தான் இரண்டாவது சாமிக்கும் மனைவி மக்களுண்டு. இவர்கள் வவுனியாவில் சென்று குடியேறி உள்ளனர் இவரது மகன் ஒருவர் மது போதையில் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டவர் அவரின் மனைவி விதவையாக 3 பிள்ளைகளுடன் இங்குள்ளார். இன்னேர் மகன் தனது கணவனின் மது போதை தாங்க முடியாது தற் கொலை செய்து விட்டார். இவருக்கும் ஐந்து பிள்ளைகள் உண்டு. குறிப்பிட்ட இச்சாமிகளின் தம்பியாரே ஆர். பி. சுப்பிரமணியம் (புறாடி) ஆவார். 3ம் சாமிக்கும் மனைவி பிள்ளைகளுண்டு குறிப்பிட்ட இம் 3ஆம் சாமிபற்றி அண்மையில் வெளிவந்த செய்திகள் பற்றிச் சில வரிகள். இச்சாமியாரின் மடத்தைக் கட்டுவதற்கு முன்னர் கொன்ருய்க்கு எடுத்த இராணுவ அதிகாரியான தங்கராசா என்பவர் தனது வீடு கட்டியகடனில் மாட்டுப்பட்டிருந்த போது அக்கடனை இப்பணத்தின் மூலமே மீண்டார். இவ்விராணுவ அதிகாரியின் மகனொருவர் இப்பணத்தைக் கொண்டு ஒரு மோட்டார்ச் சைக்கிள் ஓடுறர். பின் சீற் விற்பனையைத் தான் செய்ய முயன்றதை சாமியார் தடுத்த தனுலேயே இவர் தங்களுக்கு பொய்யான தகவல்களை வழங்கினர். குறிப்பிட்ட இச்சாமியாரின் பிள்ளைகளான பணிப்புலம் அம்பாள் ஆலயத்திற்கு முன் பாக சுற்றுமதில் கட்டியது உண்மை அத்துடன் இவர்களிருவரும் றெயின் ரீச்சர்கள். சாமியார் மனைவிக்கு தற்போது சுகயீனம் சுகயீனச்செலவுப் பொறுப்பு பொதுமக்களிடமிருந்து...?

பொன்னம்பலச் சாமியின் தம்பியான இவ்வூர் நரகாசுரன் என வர்ணிக்கப்படும் ஆர்; பி; எஸ் தற்போது அண்மையில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தினுல் டி; ஆர்: ஓ வால் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளார். தற்போது இவர்கள் குடும்பப்பொறுப்பு சாமியார் மூலமான பொது மக்கள் பொறுப்பு...?

இப் பொன்னம்பல சுவாமிகளே சென்ற வருடம் இவ்வாலயத்தில் மல்லாகம் நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்புக்கெதிராகத் தன்னுடைய தலைமையின் கீழ் கந்திமுனைகளின் முன் பலோத்காரமாக உரும்பிராயைச் சேர்ந்த முன்னுள் அதிபர் ஒருவரை குருக்களெனக் கூறி கொடியேற்றத் திருவிழாச் செய்தார் என்பதும் உண்மை. ஆனுல் இவர் பிரபல சாமியார்... ஆச்சரியமாக இல்லையா...?

ஆம் ஊருக்கு ஆச்சரியமாகவே தென்படும். இப்பேற்பட்ட போலிச் சாமிகளுக்கு ஒரு கோப்பை தண்ணீர் கூடக் கொடுக்காதீர்கள் என்பதே என்னுடைய வேண்டுகோள். இறைவன் அவனவன் மனத்திலேயே இருக்கின்றுன். நம்பிக்கை என்பது நன்மையில் தான் உண்டு. இதை உணர்ந்து பொது மக்கள் செயல்பட்டு சைவசமயத்தை வளம் பெறச் செய்வார்களென நம்புகின்றேன்.

நன்றி
இறை அருளை நாடி நிற்கும்
பக்தன்.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.

இப் பத்திரிகையை நாம் சைவ சீலங்களின் உயர்வை நன்கு அநுபவத்தில் தெளிந்தே கருத்துக்களை உலக மக்களுக்குத் தெரிவித்து வருகின்றோம். யாருடனும் பகையில்லை தமிழர்களின் உயர்ந்த கலாச்சாரங்கள் கீழ் நோக்கிப் போகின்றன, ஆனதினுல் நமக்கு எந்தத் துயரம் நேரினும் சைவத்தின் உண்மை நிலையை உலக மக்களுக்குத் தெரியப்படுத்து வதற்காக எமது சந்திரதீப அச்சகத்திலிருந்து வெளியாகுகின்றது, வருடச் சந்தா ரூபா 40. பிரசுரிப்பவர் கொக்குவில் மேற்கில் இருக்கும் திரு. வை. நல்லையா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org